விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 04 செவ்வாய்க்கிழமை (17.03.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 89

## வேகமாக பரவும் கொரோனா வைரஸ்
# வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தவர்களை பதிவு செய்க
### பாதுகாப்பு அமைச்சு விசேட அறிக்கை

(கொழும்பு)

மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் 15ஆம் திகதி வரை ஐரோப்பா, ஈரான், தென்கொரியா ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்தவர்கள் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள விசேட அறிக்கை ஒன்றின் மூலம் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## கொரோனா சந்தேகத்தில்
### யாழ்.போதனாவில் ஒருவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாமென்ற சந்தேகத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் இராணுவச்சிப்பாய் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். 23

## கொரோனாவை தவிர்க்க
## புகைத்தலை தவிர்ப்பது பாதுகாப்பானது

(கொழும்பு)

கொரோனா தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள் 23



## 134 விமான பயணிகள்
# வவுனியா கொரோனா பரிசோதனை முகாமுக்கு நேற்று கொண்டு வரப்பட்டனர்

(வவுனியா)

வவுனியா பம்பைமடு பெரிய கட்டு இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரிசோதனை தடுப்பு முகாமுக்கு நேற்று மாலை 4.45 மணியளவில் மேலும் 134 விமான பயணிகள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு வரும் இத்தாலி, தென்கொரியா, ஈரான் நாட்டவர்கள் 14 நாட்கள் தடுத்து வைத்து கொரோனா தொற்று உள்ளதா என்ற பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் நேற்றும் வவுனியா 23

## குளிர்பான விற்பனை நிலையத்தில்
# சுகாதார வைத்திய அதிகாரி நந்தகுமார் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

சுகாதார வைத்திய அதிகாரி நந்தகுமார் மீது யாழ். நல்லூர் பகுதியில் நேற்றுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் இருவரை கைது செய்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, நல்லூர்ப்பகுதியில் இயங்கும் பிரபல குளிர்பான நிலையத்தில் வெளிநாட்டவர்கள் குளிர்பானம் அருந்தியுள்ளனர். அங்கு சென்ற சுகாதார வைத் 23

## மேலும் 10 பேருக்கு கொரோனா
# பாதிக்கப்பட்டோர் 28 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

மேலும் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில்கொரோனா தொற்றுக்கு உள்ளானோரின் எண்ணிக்கை 28 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய 23

# பொது விடுமுறை 3 நாட்கள் நீடிக்கும்
### சுகாதாரம், வங்கி, போக்குவரத்து மாவட்ட, பிரதேச செயலகங்கள் இயங்கும்

(கொழும்பு)

சுகாதாரம், உணவு, போக்குவரத்து, அத்தியாவசிய சேவை, வங்கி, மாவட்ட செயலாளர் அலுவலகம் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகம் தவிர்ந்த ஏனைய அனைத்து அரச நிறுவனங்களுக்கு மூன்று நாட்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. தனியார் துறையினருக்கும் இந்த விடு 23

## முகக் கவசத்துக்கு அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் அச்சுறுத்தலை அடுத்து முக கவசத்திற்கான கட்டுப்பாட்டு விலையை சுகாதார அமைச்சு நிர்ணயித்துள்ளது.

அதன்படி ஒரு முறை பயன்படுத்தக் கூடிய மாஸ்கின் 23

# கொரோனா வைரஸ் அடுத்த ஆண்டு வசந்தகாலம் வரை நீடிக்கும் அபாயம்
### இங்கிலாந்து சுகாதாரத்துறை தெரிவிப்பு

(லண்டன்)

கொரோனா வைரஸ் தாக்கம் அடுத்த ஆண்டு வசந்த காலம் வரை நீடிக்கும் எனவும் 7.9 மில்லியன் மக்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்படலாம் எனவும் இங்கிலாந்து சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று நோயினால் அடுத்த 12 மாதங்களுக்கு 7.9 மில்லியன் மக்கள்வைத்தியசாலையில் சிகிச்சை 23

## அனைத்து வழக்கு விசாரணைகளும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

கொரோன வைரஸ் அச்சம் காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் 23

## யாழ்.போதனா வைத்தியசாலையில்
# அனுமதிக்கப்பட்ட இருவருக்கும் கொரோனா தொற்று இல்லை

(கொழும்பு)

கொரோனோ வைரஸ் தொற்றுக்கு இலக்காகியிருக்கலாம் எனும் சந்தேகத்தில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள், பரிசோதனைகளின் பின்னர் வீடுகளுக்குச் சென்றுள்ளனர். அவர்களுக்கு தொற்று இல்லை என்பது பரிசோதனைகளின் மூலம் கண் 23

# மன்னார் கிராஞ்சி பகுதியில் 142 கிலோ கஞ்சா மீட்பு

(மன்னார்)

மன்னார் - கிராஞ்சி பகுதியில் கடற்படை மற்றும் கலால் அலுவலகம் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது 142 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்திற்கு உரிய 8 உரைப்பைகளில் 65 பொதிகளில் இருந்து மொத்தம் 142 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா தொடர்பான மேலதிக விசாரணைகள் கலால் அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. (ம-3)

### கொரோனாவை பயன்படுத்தி எதிர்க்கட்சியை முடக்கி

# அரசியல் இலாபம் பெற கோட்டா அரசு முயற்சிக்கின்றது

## த.மு.கூ.தலைவர் மனோ கணேசன்

(கொழும்பு)

அரசாங்கம் கொரோனா கொடுமையை பயன்படுத்தி, எதிர்க்கட்சிகளை வீட்டுக்குள் முடக்கி வைத்து விட்டு, தேர்தலை நடத்தி அரசியல் இலாபம் பெற முயல்கிறது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் இரகசிய திட்டம் இதுவாகும். நாளுக்கு நாள் அரசாங்கத்தின் செல்வாக்கும், சொல்வாக்கும் நாட்டுக்குள் படு வீழ்ச்சியை நோக்கி செல்வதால், அரசாங்கமும், அதன் இரகசிய நண்பர்களும் கொரோனா கொடுமைக்குள்ளேயும் தேர்தலை நடத்த முனைகிறார்கள்.

இன்றைய நிலைமையில் தேர்தல் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டால், இலட்சக் கணக்கான மக்கள் மிகப்பெரும் சுகாதார ஆபத்துகளை எதிர்நோக்க வேண்டி வரும்.

ஆகவே தேர்தலை பிற்போட்டு விட்டு, அரசியல் கட்சி பேதங்களுக்கு அப்பால் சிந்தித்து, நாட்டை காக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை, தமிழ் முற்போக்கு கூட்டணி கோருகிறது என முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இதுபற்றி தனது டுவிட்டர் தளத்திலும் கருத்து கூறியுள்ள மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

அரசியல் இலாபம் பெறும் நோக்கில் செயற்பட வேண்டாம் என, "தேசிய வீரர்கள்" என்று கூறி பதவிக்கு வந்த இந்த பிற்போக்கு அரசாங்கத்துக்கு நாம் கூறிவைக்க விரும்புகிறோம். சில தனியார் மற்றும் அரசாங்க தொலைக்காட்சிகளை பயன்படுத்தி, தமது அணியினரை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட வைப்பது. அதேவேளை எதிரணியினரை கொரோனா ஆபத்தை காட்டி வீட்டுக்குள் முடக்கி வைப்பது. இதுதான் இந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் திட்டம்.



ஆட்சிக்கு வந்த நூறு நாட்களுக்குள்ளேயே, பசுத்தோல் போர்த்திய நரியான இந்த அரசாங்கத்தின் சாயம் வெளுத்து உண்மைச் சொரூபம் தெரிய ஆரம்பித்து விட்டது. வாக்களித்த சிங்கள மக்களே இன்று அதிர்ச்சியில் உறைந்து போய் நிற்கிறார்கள். ஆட்சிக்கு வந்தவர்கள், செய்தவைகள் என்று எதுவும் சொல்லிக் கொள்ள கிடையாது. எமது ஆட்சியின் மக்கள் நல திட்டங்களை நிறுத்தியதுதான் இந்த அரசாங்கம் செய்த ஒரே வேலை.

எனவே இன்று இந்த கொரோனா கொடுமை, தனக்கு கிடைத்த பெரும் கொடை என இந்த அரசாங்கம் நினைக்கிறது. இதை பயன்படுத்தி, மக்களுக்கு உண்மையை எடுத்துககூறி இந்த அரசாங்கத்தின் உண்மை சொரூபத்தை மேலும் எடுத்துக்கூறும் சந்தர்ப்பத்தை, எதிர்க்கட்சிகளுக்கு வழங்காமல் இருக்க அரசாங்கம் விரும்புகிறது. கொரோனா மூலம் எதிர்க் கட்சிகளை வீட்டுக்குள் முடக்க அரசு நினைக்கிறது. அதன் பின் உடனடியாக தேர்தலை நடத் தவே அரசாங்கம் விரும்புகிறது.

இந்த இரகசிய அரசியல் நிலைப்பாட்டை நிறுத்தி வைத்து விட்டு, உடனடியாக தேர்தலை பிற்போட்டு, கொரோனா கொடுமையில் இருந்து, நாட்டைக் காக்க, அரசியல் கட்சி பேதங்களுக்கு அப்பால் சென்று சிந்திக்கு மாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நாம் கோருகிறோம் என்றார். (ம-3)

### கொரோனா அச்சம்

# இருவாரம் மலேசியா முடக்கப்படுகிறது

## மலேசிய பிரதமர்

(கோலா லம்பூர்)

கொரோனா (COVID-19) வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மலேசியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதையும் வெளிநாட்டவர் மலேசியாவுக்குள் நுழைவதையும் இரண்டு வாரங்களுக்கு நிறுத்தப் போவதாக அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

கோவிட் - 19 வைரஸ் பரவலைத் தடுக்க நடமாட்டத்தைக் குறைக்கும் நோக்கில் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்படுவதாக மலேசியப் பிரதமர் முஹிதீன் யாசின் தொலைக்காட்சியில் நிகழ்த்திய உரையில் தெரிவித்தார்.

நாளை புதன்கிழமை முதல், மார்ச் 31 வரை மலேசியர்கள் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து திரும்புவோர், சுகாதாரப் பரிசோதனைகளுக்குப் பின் 14 நாட்கள் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மலேசியப் பிரதமர் கேட்டுள்ளார்.

வெளிநாட்டவர் எவரும் அந்த காலகட்டத்தில் மலேசியாவுக்குள் நுழைய முடியாது. சமயப் பொதுக்கூட்டங்கள், விளையாட்டு நிகழ்ச்சிகள், சமூக கலாசார நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (ம-3)

# ரிஷாட், மேர்வின் சில்வாவுக்கு சி.ஐ.டி 4ஆம் மாடிக்கு அழைப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான ரிஷாட் பதியுதீனை எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பு கோட்டையில் உள்ள சி.ஐ.டி. தலைமையகமான 4ஆம் மாடியில் ஆஜராகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சதொச நிறுவனத்தின் ஆவணங்கள் பலவற்றை மூன்றாம் தரப்பு நபர் ஒருவரின் கைக்கு கிடைக்கச் செய்தமை, மின் பிறப்பாக்கிகளை கொள்வனவு செய்யும்போது இடம் பெற்றதாக கூறப்படும் மோசடிகள் மற்றும் 7 ஆயிரத்து 340 மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதியின்போது இடம்பெற்றதாக கூறப்படும் மோசடிகள் குறித்தான விசா ரணைகளுக்காக ரிஷாட் பதியுதீன் அழைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கடந்த 2007ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் திகதி இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறியமை மற்றும் அதனுடன் தொடர்புடைய சம்பவங்கள் குறித்த விசாரணைகளுக்காக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 18ஆம் திகதி கோட்டையில் உள்ள சி.ஐ.டி. தலைமையகமான நான்காம் மாடிக்கு முற்பகல் 10 மணிக்கு ஆஜராகுமாறு சி.ஐ.டி.மேர்வின் சில்வாவுக்கு இந்த அறிவித்தலை அனுப்பியுள்ளது. (ம-3)

### கொரோனா வைரஸ் தொற்று

# போலியான தகவல்கள் பரப்பிய இருவர் கைது

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக போலியான தகவல்களை பரப்பிய இருவர், குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராகம மற்றும் பண்டாரகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்தேகநபர்கள் இருவரும் சமூக ஊடகங்களை பயன்படுத்தி போலி தகவல்களை பரப்பியுள்ளதாக கூறப்படுகின்றது.

இலங்கையில் இதுவரை 28 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

### கூட்டணியின் முதன்மை வேட்பாளர்

# சிவசக்தி ஆனந்தன் வேட்புமனு பத்திரத்தில் கையொப்பமிட்டார்



(வவுனியா)

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் சிவசக்தி ஆனந்தன் வேட்பு மனு பத்திரத்தில் நேற்று கையொப்பமிட்டார்.

இந் நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான தியாகராஜா, இந்திரராசா மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் உறுப்பினர்களான அருந்தவராஜா, மதிகரன், பரமேஸ்வரன், சஜீ ஆகியோரும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். (ம-3,299)

### யாழ்.மறை மாவட்ட தேவாலயங்களில்

# மறு அறிவித்தல்வரை சிறப்பு வழிபாடுகளில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மறைமாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் நேற்று திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை சிறப்பு வழிபாடுகள் இடம்பெறாது என்று கத்தோலிக்கத் திருச்சபையின் யாழ்ப்பாணம் குருமுதல்வர் ஜோசப் தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் அறிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று அச்ச நிலை காரணமாக அதனை கட்டுப்படுத்த நாட்டில் முன்னெடுக்கும் தேசிய திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதனால் கத்தோலிக்க பெருமக்கள் தமது வீடுகளிலிருந்து வழிபாடுகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ம-3)

# சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டி

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, 2020 பொதுத் தேர்தலில் சில மாவட்டங்களில் தனித்து போட்டியிடும் என அக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் நுவரெலியா, களுத்துறை, வன்னி மற்றும் யாழ்.மாவட்டங்களில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கை சின்னத்தின் கீழ் தனித்து போட்டியிடப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிடும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (ம-3)

# மக்களின் உயிர் பாதுகாப்பைவிட பெரும்பான்மையே அரசின் இலக்கு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விசனம்



(கொழும்பு)

மக்களின் உயிர் பாதுகாப்பை விட அரசாங்கம் எப்படியாவது தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலே செயற்பட்டு வருகிறது. பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்ற வகையில் தேர்தலுக்குச் செலவாகும் அனைத்து செலவினங்களையும் கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு செலவிடத் தயாராக இருக்கின்றோம்.

அத்துடன் நாட்டின் தற்போதைய நிலையில் தேர்தலொன்றுக்குச் செல்வது எப்படி சாத்தியமாகும் என்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பின் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் சீனாவில் தாக்கம் செலுத்தும்போதே அது தொடர்பில் கவனம் செலுத்தி, எமது நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என 5 வாரங்களுக்கு முன்னரே பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பி, அரசாங்கத்துக்கு அறிவுறுத்தினேன். ஆன்றால் அது தொடர்பில் அரசாங்கம் கண்டுகொள்ளவில்லை. எமது கோரிக்கையை அரசாங்கம் அன்று செயற்படுத்தி இருந்தால் நாட்டுக்கு இந்தளவு பாதிப்பு ஏற்பட்டிருக்காது.

மேலும் கொரோனா வைரஸ் தாக்கத்தில் நியூசிலாந்தில் 6 பேர் பாதிக்கப்பட்டதுடன் அந்த நாடு அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்துள்ளது. ஆனால் எமது நாட்டில் இதுவரை 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டும் அரசாங்கம் எந்தத் தீர்மானத்தையும் எடுக்காமல் இருக்கிறது. வைரஸை கட்டுப்படுத்த அரசாங்கத்திடம் முறையான வேலைத்திட்டம் இல்லை. இந்த நிலைமை தீவிரமடைந்தால் அதற்கு முகம்கொடுக்கத் தேவையான முகக்கவசங்கள், மருந்து வகைகள் போதுமானளவு கையிருப்பில் இல்லை. அதனால்தான் அனைத்துத் தரப்பினரும் கலந்துரையாடி முறையான வேலைத் திட்டத்தை மேற்கொள்ளவே பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு கோரியிருந்தேன். ஆனால் இதற்கு முறையான பதிலளிக்காமல் வைரஸை பயன்படுத்தி சஜித் பிரேமதாஸ அரசியல் செய்வதாக அரசாங்க தரப்பினர் விமர்சிக்கின்றனர்.

நாட்டு மக்களின் உயிரைப் பணயம் வைத்து அரசியல் இலாபம்தேட எமக்கு எந்தத் தேவையும் இல்லை. அரசாங்கத்தின் தற்போதைய இயலாமையைப் பயன்படுத்திக்கொண்டு தேர்தலுக்குச் செல்வதால் எதிர்க்கட்சிக்கு அதன் நன்மை அதிகம். என்றாலும் நாங்கள் அவ்வாறு சிந்திக்கவில்லை.

மேலும் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக சர்வதேச நாடுகள் பலவற்றில் தேர்தல்களை ஒத்தி வைத்துள்ளன. பிரிட்டனில் இடம்பெற இருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மே மாதம்வரை பிற்போடப்பட்டது. அதேபோன்று ஜோர்ஜியாவில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னேற்பாடாக இடம்பெறும் ஆரம்பத் தேர்தல் நடவடிக்கைகளை கடந்த 3 ஆம் திகதியில் இருந்து ஏப்ரல் 19 வரை பிற்போட்டு இருக்கின்றனர். அதனால் மூன்றில் இரண்டைவிட மக்களின் உயிர் முக்கியம் என்பதை அரசாங்கம் உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கொடிய கொரோனாவால்
## 6,500 பேர் பலி! 160,000 பேர் பாதிப்பு

| நாடு | பலி | பாதிப்பு |
|---|---|---|
| சீனா | 3,199 | 80,860 |
| இத்தாலி | 1,809 | 24,747 |
| ஈரான் | 724 | 14,000 |
| ஸ்பெயின் | 292 | 7,844 |
| பிரான்ஸ் | 79 | 5,423 |
| தென்கொரியா | 75 | 8,236 |
| அமெரிக்கா | 65 | 3,782 |
| இங்கிலாந்து | 10 | 1,391 |
| இந்தியா | 2 | 117 |
| உலகளாவிய ரீதியில் | 6,515 (அதிகம்) | 160,000 (அதிகம்) |

## பொது விடுமுறையை ஒருவாரத்திற்கு நீடிக்குக

### அரச வைத்திய அதிகாரிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொடர்பான நிலையை மதிப்பாய்வு செய்யும்வரை பொது விடுமுறையை ஒரு வாரத்திற்கு நீடிக்குமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த மதிப்பாய்வு நடவடிக்கைகள் முடியும் வரை மக்களின் நடமாட்டத்தைக் குறைக்க இந்த அறிவிப்பை விடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும்கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் முகமாக கப்பல்கள் சேவைகளையும் இரண்டு வாரங்களுக்கு நிறுத்தி வைக்குமாறும் ஜனாதிபதியிடம் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மேலும் கோரியுள்ளது. (ஐ)

# இவ்வருடம் பெப்ரவரி முதல் வெளிநாடுகளிலிருந்து வடக்கிற்கு வந்தவர்களின் விபரங்களைத் திரட்டுக

## அரச அதிபர்களுக்கு ஆளுநர் பணிப்புரை



(யாழ்ப்பாணம்)

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து நமது நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் பல்வேறு நடைமுறைகளை அமுல் படுத்தி வருகின்றது.

குறிப்பாக வெளிநாட்டுப் பயணிகளிடம் இருந்து இந்நோய் பரவுகின்ற தன்மை அவதானிக்கப்பட்டிருப்பதால் வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகள் தொடர்பாக பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசாங்கம் அமுல்படுத்தி வருகிறது.

வடமாகாணத்தில் கொரோனா வைரஸ் பரம்பலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தேசிய கொள்கைக்கு அமைவாக சில நடைமுறைகளை உரியமுறையில் நடைமுறைப்படுத்தும்படி வடமாகாண ஆளுநர் சகல தரப்பினருக்கும் பணித்துள்ளார்.

சுற்றுலா மற்றும் பல்வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளில் இருந்து இவ்வருடம் பெப்ரவரியில் இருந்து வருகை தந்த, வருகை தருகின்ற பயணிகள் தொடர்பாக விபரங்களை கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக பெற்றுக் கொள்ளும் நடைமுறையை விரைவாக மேற்கொள்ளுமாறும் பிரதேச செயலாளர்களூடாக இவற்றை உரிய முறையில் நடைமுறைப்படுத்தும் படியும் அரச அதிபர்களுக்கு வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் பணித்துள்ளார்.

இவ் ஒழுங்குமுறை தொடர்பில் யாரும் வீணாக குழப்பமடையத் தேவையில்லை என்றும் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து வடக்கு மாகாண மக்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கத்தின் தேசிய திட்டமிடல்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் ஒரு நடைமுறையே இதுவென்றும், அனைத்துத் தரப்பினரும் இதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறும் வடமாகாண ஆளுநர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-7)

# கொரோனா பீதியால் பாகிஸ்தானில் இருந்து வெளியேறினார் கிறிஸ் லின்




பாகிஸ்தான் சூப்பர் லீக்கில் சதம் அடித்து தனது அணியை அரையிறுதிக்கு முன்னேறச் செய்த நிலையில், சொந்த நாடு திரும்பினார் கிறிஸ் லின்.

பாகிஸ்தானில் பாகிஸ்தான் சூப்பர் லீக் டி20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்று மிகப்பெரிய அளவில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் 99 சதவீத விளையாட்டு தொடர்கள் தள்ளி வைக்கப்பட்டுள்ளன.


ஆனால் பாகிஸ்தான் சூப்பர் லீக் இறுதி கட்டத்தை எட்டிவிட்டதால் எப்படியாவது போட்டியை முடித்துவிட வேண்டும் என விரும்புகிறது.

இதனால் நேற்றுமுன்தினம் நடைபெற்ற லீக் ஆட் டங்களை ரசிகர்கள் இல்லாமல் நடத்தியது. பெரும்பாலான வெளிநாட்டு வீரர்கள் சொந்த நாடு திரும்பிய போதிலும் லாகூர் குவா லண்டர்ஸ் அணிக்காக விளையாடி வந்த கிறிஸ் லின் நேற்றுமுன்தின போட்டியில் சதம் அடித்தார். இவரது சதத்தால் லாகூர் அணி அரையிறுதிக்கு முன்னே றியது.

இந்நிலையில் கிறிஸ் லின் சொந்த நாடு திரும்பினார். "கிரிக்கெட்டை விட வாழ்க்கைக்கு நிறைய விஷயங்கள் இருக்கின்றன" என இன்ஸ்டாகிராமில் பதிவிட்டு பாகிஸ்தான் சூப்பர் லீக்கில் இருந்து வெளியேறுவதை உறதிப்படுத்தியுள்ளார்.

மேலும் இதுகுறித்து கிறிஸ் லின் கூறுகையில் "ஒட்டுமொத்தமாக என் நேரத்தை மகிழ்ச்சியாக செலவழித்தேன். துரதிருஷ்டவசமாக இந்த சூழ்நிலையில் சொந்த நாடு திரும்ப முடிவு செய்துள்ளேன். நான் எப்போதுமே கிரிக்கெட்டை விட வாழ்க்கைக்கு நிறைய விஷயங்கள் இருக்கிறது என சொல்லியிருக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# கொரோனா அச்சத்தால் இந்திய ஒலிம்பிக் சங்க குழுவின் டோக்கியோ பயணம் தள்ளிவைப்பு



கொரோனா வைரஸ் தொற்று பீதி காரணமாக ஜப்பான் செல்ல இருந்த இந்திய ஒலிம்பிக் சங்க நிர்வாகிகளின் பயணம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.


கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி விட்டது. ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோரின் உயிரை காவு வாங்கி விட்டதால், கொரோனா அச்சம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அனைத்து வகை விளையாட்டுகளும் உலகம் முழுவதும் கொரோனாவினால் சீர்குலைந்து போய் கிடக்கிறது.

அடுத்த சில வாரங்களுக்கு சர்வதேச போட்டிகள் எதுவும் கிடையாது. விளையாட்டு மற்றும் அது தொடர்பான நிகழ்ச்சிகள் ரத்து, தள்ளிவைப்பு தொடர் கதையாகிறது. இதனால் விளையாட்டு ரசிகர்கள் தங்களது பொழுது போக்கு இனி என்ன? என்று ஒரு பக்கம் சமூக வலைத்தளத்தில் சூடாக விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜுலை 24-ந்தேதி முதல் ஆகஸ்டு 9-ந்தேதி வரை ஒலிம்பிக் போட்டியை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஒலிம்பிக் ஏற்பாடு மற்றும் அங்கு இந்திய வீரர், வீராங்கனைகளுக்கு வழங்கப்படும் தங்குமிடம், உணவு முறைகள், பாதுகாப்பு உள்ளிட்ட வசதி வாய்ப்புகளை ஆய்வு செய்வதற்காக மத்திய விளையாட்டுத்துறை மந்திரி கிரண் ரிஜிஜு, இந்திய ஒலிம்பிக் சங்க முன்னணி நிர்வாகிகள் மற்றும் உயர்மட்ட அரசு அதிகாரிகள் அடங்கிய குழுவினர் வருகிற 25-ந்தேதி டோக்கியோ செல்ல இருந்தனர்.

தற்போது இந்த பயணம் தற்காலிகமாக தள்ளி வைக்கப்பட்டு இருக்கிறது. மாற்று தேதி பின்னர் முடிவு செய்யப்படும் என்று கிரண் ரிஜிஜு அறிவித்துள்ளார்.

# குடும்பத்தினருடன் நேரத்தை செலவிடுங்கள்-மெஸ்சி




உங்களது குடும்பத்தினருடன் நேரத்தை உற்சாகமாக செலவிடுங்கள். இத்தகைய வாய்ப்பு எப்போதும் கிடைக்காது என்று ஆர்ஜென்டினா கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்சி கூறி உள்ளார்.

ஆர்ஜென்டினா கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் 32 வயதான லயோனல் மெஸ்சி, பார்சிலோனா கிளப்புக்காக விளையாடி வருகிறார். கொரோனா அச்சுறுத்தலால் பெரும்பாலான கால்பந்து போட்டிகள் ரத்து செய்யப்பட்டு விட்டதால் மெஸ்சி, தனது குடும்பத்தினருடன் நேரத்தை செலவிட்டு வருகிறார்.

அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், 'ஒவ்வொருவருக்கும் இது சிக்கலான காலக்கட்டம். கொரோனா பரவலால் நாம் கவலை அடைந்துள்ளோம். உடல் ஆரோக்கியமே எப்போதும் முதலில் முக்கியம். சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வழங்கும் அறிவுறுத்தல்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும். இதன் மூலம்தான் நாம் கொரோனாவை எதிர்த்து போராட முடியும். நாம் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டிய நேரம் இது. வெளியில் செல்வதை தவிர்த்து வீட்டிலேயே இருங்கள்.

உங்களது குடும்பத்தினருடன் நேரத்தை உற்சாகமாக செலவிட அற்புதமான வாய்ப்பு இது. இத்தகைய வாய்ப்பு எப்போதும் கிடைக்காது. தற்போதைய மோசமான சூழல் விரைவில் மாறும் என்று நம்புகிறேன்' என்றார்.

# சென்னை மக்களிடம் கொரோனா முன்எச்சரிக்கை இல்லை-அஸ்வின் வேதனை



கொரோனா முன் எச்சரிக்கை நடவடிக்கையை சென்னை மக்கள் கடைபிடிக்க தவறுவதாக கிரிக்கெட் வீரர் அஸ்வின் வேதனை தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதுவரை 6,500 பேர் வரை பலியாகி உள்ளனர். 1.69 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரசால் உலகம் முழுவதும் அனைத்து வகையான விளையாட்டுகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. பல்வேறு போட்டிகள் ரத்து செய்யப்பட்டும், தள்ளி வைக்கப்பட்டும் உள்ளன.

பணம் கொழிக்கும் விளையாட்டான ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி ஏப்ரல் 15-ந்தேதிவரை தள்ளி வைக்கப்பட்டுள்ளது. கொரோனாவின் தாக்கத்தை பொறுத்து குறைந்த அளவிலான ஆட்டங்கள் நடைபெறுமா? என்பது பின்னர் தெரியவரும்.

இந்தியாவில் கொரோனாவுக்கு 115 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மத்திய, மாநில அரசுகள் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

இந்த நிலையில் கொரோனா முன் எச்சரிக்கை நடவடிக்கையை சென்னை மக்கள் கடைபிடிக்க தவறுவதாக கிரிக்கெட் வீரர் அஸ்வின் வேதனை தெரிவித்துள்ளார். சென்னையை சேர்ந்த டெஸ்ட் வீரரான அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் இது தொடர்பாக கூறி இருப்பதாவது:-

கொரோனா முன் எச்சரிக்கையை சென்னை மக்கள் தவிர்க்கிறார்கள். மக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்குமாறு கூற ப்பட்டதை சென்னை மக்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை.

சென்னையில் நிலவும் கடுமையான வெப்ப நிலையால் கொரோனா பாதிப்பு கட்டுக்குள் இருக்கும் என்று மக்கள் நினைத்து இருக்கலாம். அல்லது தங்களை எதுவும் தாக்காது என நம்பிக்கை கொண்டு இருக்கலாம்.என அஸ்வின் கூறியுள்ளார்.



# “கொரோனாவை கட்டுப்படுத்துவது சவால் மிக்கது”
# நெருக்கடி நிலையை தனித்து எதிர்கொள்ள முடியாது
# அரசிற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தொற்று தீவிரமாகப் பரவுவதைக் கட்டுப்படுத்துவது சவால் மிக்கது எனத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜெயந்த, அரசாங்கத்தால் மாத்திரம் நெருக்கடி நிலையை எதிர்கொள்ள முடியாது. எனவே மக்கள் அரசாங்கத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.**

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## சுசில் சுட்டிக்காட்டு

கொரோனா வைரஸ் தொற்று இலங்கைக்கு மாத்திரமல்ல சர்வதேசத்தில் பலம் வாய்ந்த பல நாடுகளுக்குப் பாரிய அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது.


வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது சவால் மிக்கது. உலக சுகாதார ஸ்தாபனம் விடுத்துள்ள ஆலோசனைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் பல தீர்மானங்களை எடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் வேலைத் திட்டத்தில் அரசாங்கத்தால் மாத்திரம் தனித்துச் செயற்பட முடியாது.

மக்கள் அனைவரும் பொறுப்புடன் செயற்பட்டு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 16 அமைச்சுக்களுக்கு மாத்திரமான நிதி ஒதுக்கீடு சட்டத்துக்கு முரண்

## சம்பிக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

நிதியமைச்சின் செயலாளரால் 16 அமைச்சுக்களுக்கும் நிதி ஒதுக்கி வெளியிடப்பட்ட சுற்று நிருபம், அரசியலமைப்பிற்கு முரணானதென ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், “மக்களின் நலனுக்காக நாடாளுமன்றத்தைக் கூட்டி தேவைகளை நிறைவேற்றுவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டால் அதற்கு ஆதரவளிக்க தயாராகவுள்ளோம். ஆனால் அரசியலமைப்பிற்கு முரணான செயற்பாடுகளுக்கு ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டோம்.

மேலும் தற்போது கொரோனா வைரஸ் தாக்கத்தை காரணம் காட்டி அரசாங்கம் அரசியலமைப்புக்கு முரணாக செயற்பட்டு வருகிறது. கடந்த டிசெம்பர் மாதமே இந்த வைரஸ் பரவ ஆரம்பித்தது. ஜனவரி மாதம் முதல் ஏனைய நாடுகளுக்கும் பரவ ஆரம்பித்தது.

எனினும் அரசாங்கம் அப்போது எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை” எனக் குற்றம் சாட்டினார். (இ-7)

# தமிழ் - சிங்கள மக்கள் இனியாவது ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## வாசுதேவ வேண்டுகோள்


(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனில், தமிழ்- சிங்கள மக்கள் ஒன்றிணைய வேண்டும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

யாழில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வாசுதேவ நாணயக்கார மேலும் கூறியுள்ளதாவது, “நாங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதன் மூலம் எந்தப் பிரயோசனமும் இல்லை.

அதன் காரணமாகத்தான் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பெடுத்து மூன்று மாதங்கள் ஆகியும் நாம் இன்றுவரை தமிழ் தேசிய கூட்டமைப்புடன் எந்தவித பேச்சுவார்த்தைக்கும் முன்வரவில்லை.

எனவே இனிவரும் காலங்களில் இணைந்து செயற்படுவதன் மூலமே நமக்கு உரிய தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும்.



அத்துடன் நாம் தமிழ் மக்களுக்கு உரிய தீர்வினை பெற்றுக்கொடுப்பதில் மிகவும் ஆர்வமாக உள்ளோம். அதற்கு தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்” எனவும் குறிப்பிட்டார். (ஜ-2)

# கொரோனா தாக்கத்திலிருந்து உயிர்களைக் காக்க அனைத்து இந்து ஆலயங்களிலும் விசேட பூஜை வழிபாடுகளை மேற்கொள்க

(கொழும்பு)

பௌத்த சாசனம், கலாசாரம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இலங்கைத் தீவில் அமைந்துள்ள அனைத்துச் சமய வழிபாட்டுத் தலங்களிலும் உலகை உலுக்கி வரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து அனைத்து உயிர்களையும் காக்க இறை ஆசி வேண்டி நாளை 18 ஆம் திகதி புதன்கிழமை இரவு 7 மணியளவில் விசேட பூஜை வழிபாடு களை நிகழ்த்துமாறு வேண்டு கோள் விடுக்கப்பட்டது.

அந்த வகையில் இலங்கைத் தீவில் அமைந்துள்ள அனைத்து இந்து சமய ஆலயங்களிலும் இத் தேசிய அனர்த்தம் தீர வழி பாடுகளை ஆற்றி, இறை அருளால் நன்மை பெற்று உய்யுமாறு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் கோரிக்கை விடுப்பதாக பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)

# அரசின் அறிவிப்பை உதாசீனப்படுத்திய மக்கள்

(கரணவாய்)

விடுமுறை வழங்கப்பட்டது பொதுமக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்ப்பதற்காகவே, ஆனால் அதனை பொதுமக்கள் உதாசீனம் செய்து வருவதாக சுகாதார பகுதியினர் கவலை வெளியிட்டனர்.

கொரோனா வைரஸ் தொற்று உலக நாடுகளை உலுக்கி வரும் நிலையில் தற்போது இலங்கையிலும் அதன் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்துவதற்காக பொது மக்கள் ஒன்று கூடுவதை தவிர்ப்பதற்காக அரசாங்கத்தால் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன.

இந்நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களுக்கும் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டது. இவ் விடுமுறையானது பொது மக்கள் ஒன்று கூடுவதை தவிர்ப்பதற்காகவே அறிவிக்கப்பட்டது.

ஆனால் நேற்று திங்கட்கிழமை விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலும் அதனை உதாசீனம் செய்து மக்கள் ஆலயங்களில் பெருமளவில் ஒன்று கூடியதை சுகாதாரப் பகுதியினர் அவதானித்தனர்.

இத்தாலியில் தேவாலயங்களில் ஒன்றுகூடியவர்களாலும், உணவு விடுதிகளில் கூடியவர்களினாலுமே கொரோனா தொற்று அதிகளவில் அதிகரித்ததாகவும் எனவே இயன்றவரை பொது மக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்குமாறும் சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தினர். தேவைக்கு ஏற்றவாறு வீட்டிலுள்ள ஒருவர் மட்டும் வெளியில் சென்று விட்டு வந்தவுடன் கைக்ளை கழுவி சுத்தம் செய்யுமாறு ஜனாதிபதி தனது டுவிட்டர் பக்கத்தில் ஏற்கனவே அறிவித்திருந்தமையை சுகாதாரப் பகுதியினர் சுட்டிக் காட்டினர். (இ-60)

# கொரோனாவைப் பயன்படுத்தி எம்மீது மீண்டும் இனஅழிப்பா?

(கொழும்பு)

கொரோனா வைரஸ் மருத்துவக் கண்காணிப்பு நிலையங்களை தமிழர் தாயகத்தைமையப்படுத்தி ஸ்தாபிப்பதன் ஊடாக மற்றுமொரு இன அழிப்பினை செய்வதற்கு அரசாங்கம் விளைகின்றதா என்று மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பொறியியலாளர் சண்.குகவரதன் கேள்வி எழுப்பினார். (ஐ)







மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் கோவில் பங்குனித் திங்கள் முதல் நாள் உற்சவம் நேற்று இடம் பெற்றது.

# வகுப்புக்கள் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

இணுவிலில் இயங்கி வரும் திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த,சைவத் திருமுறை வகுப்புக்களும்,இணுவில் சுகவாழ்க்கைப் பேரவையின் திருமந்திர வகுப்பும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டன.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து ஒவ்வொருவரும் தற்பாதுகாப்புத் தேடிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

உலகம் இந்தக் கொடிய கொரோனாத் தாக்கத்திலிருந்து மீண்டெழ வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுதல் செய்து திருமுறைகளை ஓதி ஒவ்வொருவரும் பிரார்த்திப்போம் என மேற்படி பயிற்சி நெறிகளின் பொறுப்பாசிரியர் சைவப்புலவர் சு.செல்லத்துறை அறிவித்துள்ளார். (இ)

# பரீட்சைகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்படுகின்ற 2020 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சைகள் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டன. இப்பரீட்சைகள் ஏப்ரல் 10 , 11 , 12 ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடாகியிருந்தன. பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படும் என அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு, பொலநறுவை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடைபெற்று வந்த சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் மறு அறிவித்தல் வரை இடம்பெறமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## மருத்துவ ஜோதிடம்

ஜோதிடத்தில் பல்வேறு பிரிவுகள் உள்ளன. மருத்துவ ஜோதிடம் அவைகளில் ஒரு பிரிவாகும். சித்த மருத்துவத்தில் நாடி பார்த்து, நடை பார்த்து, முகம் பார்த்து கை பார்த்து, உடல் பார்த்து நோய் கண்டறிகின்றார்கள்.ஹோமியோபதி மருத்துவத்தில் உச்சி முதல் உள்ளங்கால் வரையும் தோன்றும் அறிகுறிகளையும், மனதில் தோன்றும் எண்ணங்களையும் ஆராய்ந்து நோய் கண்டறிகிறார்கள். அலோபதி மருத்துவத்தில் பல்வேறு ஆய்வுகூட் சோதனைகள் செய்து நோய் கண்டறிகிறார்கள். இது போல் ஜோதிடர்கள் தனிநபர் ஜாதகங்களை ஆய்வு செய்து நோய் கண்டறிவது சாத்தியமே.

சித்த மருத்துவர்களும்,ஆயுர் வேத மருத்துவர்களும் காலமறிந்து சிகிச்சை அளித்து வந்திருக்கிறார்கள்.இவர்களில் பெரும்பாலானோர் ஜோதிடம் அறிந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். ஜோதிடம் மூலம் நோய் கண்டறிவது எப்படி என்பதை விளக்குவது மருத்துவ ஜோதிடமாகும்.

### இராசிகளின் நோய்.

மேடம்-பித்தம், ரிஷபம்-நீர்க்கோர்வை, மிதுனம்-வாயு, கடகம்-நீர்க்கோர்வை, சிம்மம்-பித்தம்,கன்னி-வாயு,துலாம் நீர்க்கோர்வை,விருச்சிகம்-பித்தம்,தனுசு-வாதம்,மகரம்-வாயு,கும்பம்-வாதம்,மீனம்-வாதம்

### இராசிகளின் தத்துவங்கள்

மேடம்-நெருப்பு,ரிஷபம்-நிலம்,மிதுனம்-காற்று,கடகம்-நீர்,சிம்மம்-நெருப்பு,கன்னி-நிலம்,துலாம்-காற்று,விருச்சிகம்-நீர், தனுசு-நெருப்பு,மகரம்-நிலம்,கும்பம்-காற்று,மீனம்-நீர்

### இராசிகளின் உடல் உறுப்புக்கள்

மேடம்-தலை,ரிஷபம்-கழுத்து,முகம், வாய்,பல்,நாக்கு,உதடு,கண், மிதுனம்-தோள்பட்டை,கைகள்,விரல்,நகம்,காது, கடகம்-மார்பு, சிம்மம்-தொப்புள்,மேல் வயிறு,முதுகு, கன்னி-அடிவயிறு,குடல், துலாம்-இடை,இடுப்பு, விருச்சிகம்-குதம்,பிருஷ்டம், தனுசு-தொடை, மகரம்-கால்மூட்டு,கும்பம்- கணிக்கால், மீனம்-பாதம்.

### கிரக தத்துவம்

சூரியன்-நெருப்பு,சந்திரன்-நீர், செவ்வாய்-நெருப்பு,புதன்-காற்று,குரு-ஆகாயம்,சுக்கிரன்-நீர்,சனி-காற்று,ராகு-காற்றும், நெருப்பும்,கேது-நெருப்பு.

### கிரக பிணி

சூரியன்-சுரம்,பித்தம், சந்திரன்-நீர்க் கோர்வை, செவ்வாய்-மூட்டுவலி, பித்தம், புதன்-தேமல்,வாதம், குரு-மூளைக் கோளாறு, வாயுக் கோளாறு, சுக்கிரன்-சிறுநீரககோளாறு, சனி-நரம்பு தளர்ச்சி,வாயுக்கோளாறு, ராகு-வாயுக்கேளாறு, கேது-நகச்சுற்று,பித்தம்

### கிரக முக பாகம்

சூரியன்- வலது கண்,சந்திரன்-இடது கண்,செவ்வாய்-புருவம்,பற்கள், புதன்-நெற்றி,நாக்கு,கழுத்து, குரு-மூக்கு, நாசி, சுக்கிரன்-கன்னம், சனி-தாடை, ராகு-வாய்,உதடு,காது, கேது- முடி

### கிரக உடல் பாகம்

சூரியன்-வலது கண்,எலும்பு, சந்திரன்-இடதுகண்,மார்பகம், சிறுநீரகம்,வயிறு, செவ்வாய்-இருதயம்

புதன்-கைகள்,கழுத்து, தோள் பட்டை, தொண்டை,குரு- மூளை, தொடை, பாதம், மூக்கு, நாசி

சுக்கிரன்-முகம்,கருப்பை,சுக்கிலம், சுரோணிதம்,கன்னம்,சனி-பிருஷ்டம், மூட்டு,முழங்கால்,ஜீரண உறுப்பு, தாடை, ராகு- குடல், மலக்குடல், காது, தலை, கேது-நகம்,முடி.

### கிரக உடல் உள்பாகம்

சூரியன்-எலும்பு,சந்திரன்-இரத்தம், செவ்வாய்-எலும்பு மச்சை, சிவப் பணுக்கள்,புதன்-தோல்,குரு-சதை, கொழுப்பு, சனி-ஜீரணஉறுப்பு, ராகு-குடல், கேது-நரம்பு

### நோய் குறிகாட்டும் பாவங்கள்

6 ஆம் பாவம்-தவறான உணவு பழக்க வழங்கங்களால் வரும் நோய்கள்

8 ஆம் பாவம்- பரம்பரை நோய்கள், பூர்வ ஜென்ம பாவத்தால் வரும் நோய்கள்

### பாதக ஸ்தானங்கள் - செய்வினை கோளாறுகளால் வரும் நோய்கள்

சரலக்னங்களுக்கு 11 ஆம் பாவமும், ஸ்திர லக்னங்களுக்காக 9 ஆம் பாவமும், உபய லக்னங்களுக்கும் 7 ஆம் பாவமும் பாதக ஸ்தானங்களாகும்.

### நோய் நிவர்த்தி பாவங்கள்

6 இற்கு 12 ஆம் பாவம் நிவர்த்தி பாவமாகும்,8 இற்கு 2 ஆம் பாவம் நிவர்த்தி பாவமாகும்,11 இற்கு 5 ஆம் பாவம் நிவர்த்தி பாவமாகும்,9 இற்கு 3 ஆம் பாவம் நிவர்த்தி பாவமாகும்,7 இற்கு 1 ஆம் பாவம் நிவர்த்தி பாவமாகும்.

# இராசி பலன்

**மீனம்** மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மேடம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், கரைந்த சேமிப்பை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** இன்றைய நாளை அவதானத்துடன் கழிப்பது நல்லது, வார்த்தைகளில் நிதானம் தேவை, தேக நலனில் கவனம் செலுத்தும் நிலை ஏற்படலாம், பிராயண பயமுண்டு

**மிதுனம்** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறலாம்,பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி காண்பீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சூரி | சுக் | | ராகு |
| புத | இராசி பலன் | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கார்த்திகை,ரோகினி | | |
| சனி,செவ் கேது,குரு, சந் | | | |

**17.03.2020**

பங்குனி 04,செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு

அட்டமி முற்பகல் 8.53 மணிவரை

மூலம் பிற்பகல் 4.56 மணிவரை

சுபநேரம்- 10.49-12.19 மணிவரை

இராகுகாலம்-3.19-4.49மணிவரை

அட்டமி - நவமி

கவனமும், முயற்சியும் அதிஷ்டத்தைக் கொண்டு வரும்.

வளவன்

**கடகம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், உறவினர்கள் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவரின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சயன சுகக் குறைவு ஏற்படலாம்.

**சிம்மம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள்,சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும்,குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்** நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு,தொழில் வளர்ச்சி கூடும் நாள்,தேவையற்ற விவாதங்களை தவிர்ப்பது நல்லது,போசன சுகமுண்டு.

**துலாம்** சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு,நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு,தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** கடன் சுமை குறைய வழி வகை செய்வீர்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்,பயணங்களால் பலனுண்டு.

## கொரோனா அச்சம் நீங்கும் வரை

# வெளிநாட்டுப் பயணத்தை பிற்போடவும்

## வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

**புலம் பெயர்ந்துள்ள உங்களது உறவினர்கள் அண்மைக்காலத்தில் இங்கு வருகை தரத்திட்டமிட்டிருப்பின் அவர்களை தற்போதைக்கு வரவேண்டாம் என அறிவுறுத்தவும்,அதேபோல் இங்குள்ளவர்கள் வெளிநாடுகளுக்கு செல்லத் திட்டமிட்டிருந்தால் பயணத்தைப் பிற்போடவும் என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவுறுத்தினார்**

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில்,

உலகளாவிய தொற்றுநோயாக COVID 19(கொரோனா) தொற்று நோய் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது இலங்கையிலும் 15.03.2020 வரை 18 நோயாளிகள் கொரோனா தொற்றுக்குள்ளானதாக அடையாளங்காணப்பட்டுள்ளனர். எனினும் இது வரை வட மாகாணத்தில் கொரோனாத் தொற்றுள்ள ஒரு நோயாளரும் அடையாளங் காணப்படவில்லை.ஆனாலும் இந் நிலையில் கொரோனா தொற்றிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கான மாகாண சுகாதார சேவையினரின் பொது மக்களுக்கான அறிவுறுத்தல்கள் வருமாறு.

### தனிமைப்படுத்தல் (Qurantine) நடவடிக்கைகள்.

இறுதியாக 16.03.2020 இல் அறிவிக்கப்பட்ட பட்டியலின்படி பின்வரும் 14 நாடுகளிலிருந்து வருபவர்கள் கட்டாயமாக தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

1.ஈரான்,2. இத்தாலி, 3.தென்கொரியா, 4.ஆஸ்திரியா ,5. டென்மார்க் ,6. பிரான்ஸ், 7. ஜேர்மனி,8.நெதர்லாந்து, 9.சுவீடன், 10.ஸ்பெயின்,11சுவிட்சர்லாந்து, 12.பிரித்தானியா 13.பெல்ஜியம்,14. நோர்வே

மேற்படி நாடுகளிலிருந்து 09.03.2020 க்கு பின்னர் நாட்டினுள் நுழைந்தவர்கள் அனைவரும் (அந்த நாட்டவர்கள்,எமது புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் இங்கிருந்து அந்த நாடுகளுக்கு சென்று வந்தவர்கள்) தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

ஏனைய நாடுகளிலிருந்து வருபவர்கள் தமது வதிவிடங்களில் இரண்டு கிழமைகளுக்கு தம்மைத் தாமே சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த வேண்டும். மேலும் இவ்வாறானவர்கள் தங்கியுள்ள அல்லது வசிக்கும் வீட்டிலுள்ள அனைவரும் சுய தனிமைப் படுத்தலுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

புலம் பெயர்ந்துள்ள உங்களது உறவினர்கள் அண்மைக்காலத்தில் இங்கு வருகை தரத் திட்டமிட்டிருப்பின் அவர்களை தற்போதைக்கு வரவேண்டாம் என அறிவுறுத்தவும்.அதேபோல் இங்குள்ளவர்கள் வெளி நாடுகளுக்கு செல்ல திட்டமிட்டிருந்தால் இயலுமான வரை உங்களது பயணத்தை பிற்போடவும்.

உங்களது வீட்டில் அல்லது அயலில் யாராவது வெளிநாட்டிலிருந்து வந்திருந் தால் உடனடியாக பொது சுகாதார பரிசோதகர் (PHI) குடும்ப நல உத்தியோகத்தர் (PHM ) அல்லது கிராம உத்தியோகத்தருக்கு அறிவிக்கவும்.

### கூட்டம் கூடுதலைத் தவிர்த்தல்

கொரோனாத் தொற்றின் காரணமாக இலங்கையில் ஏற்கனவே கூட்டம் கூடுதல் தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பலர் கூடக் கூடிய நிகழ்வுகள் எதையும் தவிர்த்துக் கொள்வது அல்லது பிற்போடுவது அவசியமானது. மீறி நடக்கும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதிலிருந்து விலகியிருக்குமாறு பொது மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம். உதாரணமாக அணி விளையாட்டுக்கள்,விளையாட்டுப் போட்டிகள், கலை , கலாசார நிகழ்வுகள் ,வழிபாட்டு இடங்கள் அத்தியாவசியமற்ற கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்கள் அனைத்தையும் பிற்போடவேண்டும்.

திரையரங்குகள்,கலை நிகழ்வுகளும் இரத்துச் செய்யப்பட வேண்டியவையே. இவற்றை மீறி இவ் வகை கூட்டம் கூடும் நிகழ்வுகள் இடம் பெற்றால் பொது மக்கள் உடனே பொதுச் சுகாதார பரிசோதகருக்கு PHI அல்லது கிராம உத்தியோகத்தருக்கு அறிவிக்கவும்.

குடும்ப நிகழ்வுகளான திருமண நிகழ்வுகள் போன்றவற்றை பிற்போடுவது நல்லது அல்லது குறைந்தளவு ஆட்களுடன் இவற்றை நடத்துங்கள்.

சகல வணக்கத் தலங்களிலும் பக்தர்கள் கூடுவதை தவிர்த்துக் கொள்வதுடன் திருவிழாக்கள் வழிபாடுகளை எளிமையாக நடத்த பொறுப்பானவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பயணம் செய்வதை இயன்றவரை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வைத்தியசாலைகளுக்கு அனுமதிக்கப் பட்டுள்ள நோயாளர்களைப் (ஏனைய நோய்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளவர்களைக் கூட) பார்வையிடச் செல்வதை கட்டாயமாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நோயாளிகளுக்கு உணவு கொடுப்பதாயின் ஒருவர் மட்டும் குறுகிய நேரத்தில் சென்று வர வேண்டும். உள்ளக நோயாளிகள் உள்ள சகல அரச வைத்தியசாலைகளிலும் தரமான உணவு விநியோகம் நடைபெறுவது கவனத்திற்குரியது.

### தனிநபர் சுகாதாரம்

சகலரும் தனது தனிநபர் சுகாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் தமது வீட்டிற்கு வெளியில்செல்கின்றவர்கள் அடிக்கடி குறைந்தது இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒருமுறை தமது கைகளை முறைப்படி கழுவ வேண்டும்.

வீட்டிற்கு திரும்பும் போது வீட்டிற்குள் செல்ல முன்னர் வாசலிலேயே கைகளை முறைப்படி கழுவுவதுடன் முகத்தையும் கழுவ வேண்டும்.கைகளை முறைப்படி கழுவுவதற்கு சாதாரண சவர்க்காரமும் நீரும் போதுமானது. வேலைத் தளங்களிலும் பொது இடங்களிலும் கைகளை முறைப்படி கழுவுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

யாருக்காவது கொரோனாத் தொற்றின் அறிகுறிகளான காய்ச்சல்,களைப்பு ,வரட்டு இருமல் போன்றவை (சிலருக்கு உடல் நோ, மூக்கடைப்பு,தொண்டை நோ போன்றவையும் ஏற்படலாம்) ஏற்பட்டால் உடனடியாக முகக் கவசம் அணிவதுடன் அரசாங்க வைத்தியசாலைகளை அணுகவும்.

இவ் வகை நோயாளிகள் பொது இடங்களுக்கு செல்வதைத் தவிர்த்துக் கொள்ளவும். குறிப்பாக வேலைத் தளங்களுக்குச் செல்ல வேண்டாம்.

### சுகாதாரத்துறை ஊழியர்கள்

நேற்று அரசாங்க வர்த்தக வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. விடுமுறைகள் மேலும் அறிவிக்கப்படலாம். ஆனால் சுகாதாரத் துறையினருக்கு இவ் விசேட விடுமுறை நாட்கள் கடமை நாட்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இன்று முதல் சகல பதவிகளிலும் சுகாதார அமைச்சு ,சுகாதாரத் திணைக்களங்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள்,வைத்தியசாலைகளில் கடமையாற்றும் அலுவலர்கள் உடனடியாகக் கடமைக்குத் திரும்பவேண்டும்.

### பல்துறைசார் கலந்துரையாடல்

இன்று( 17.03.2020 ) முற்பகல் 10 மணியளவில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரால் அழைக்கப்பட்ட சகல திணைக்களத் தலைவர்களுக்குமான (அழைப்பிதழ் அனுப்பப்பட்டவர்கள்) கலந்துரையாடல் கட்டாயமாக நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ

## யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் கைகளை கழுவ ஏற்பாடு செய்யுங்கள்

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் தொற் றாது தடுப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனமும் இலங்கை சுகாதார ஸ்தாபனமும் பொது மக்களை கைகளைக் கழுவி சுத்தமாக வைத்திருக்குமாறு அறிவுறுத்தியுள்ளன.

எனவே யாழ்.மத்திய பேருந்து நிலையத்திற்கு வருகை தரும் பயணிகள் தமது கைகளை கழுவுவதற்கு ஏற்ற வகையில் ஒழுங்குகளை செய்து தருமாறு யாழ். நீரிழிவுக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-7)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 15 செவ் 8 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. Tender Business Executive (Private)<br>எதிர்பார்ப்பு: சாதாரண அரச, தனியார் உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/10668 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 31 செவ் 3 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் (அரச)<br>எதிர்பார்ப்பு: படித்த தகுதிக்கேற்ற மணமகன்.<br>தொ.இ: G/7480 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: செவ் 10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: B.Sc. Logistic Officer<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம். வடமாகாணம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/10669 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 26 செவ் 9 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7483 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி 1<br>கி.பா: 49.5 செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: B.Sc Teacher<br>எதிர்பார்ப்பு: விஞ்ஞான பட்டதாரி. அரச தொழில்<br>தொ.இ: B/10670 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 28 செவ் 11 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி. (வெளிவாரி)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உத்தியோகம்<br>தொ.இ: G/7485 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 38, சூரிசெவ் 1 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. சொந்தக்கடை.<br>எதிர்பார்ப்பு: சூரிசெவ் பொருத்தம்<br>தொ.இ: B/10672 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி. Water supply (Gov).<br>எதிர்பார்ப்பு: Doctor,Engineer போன்ற உயர் பதவிகள்<br>தொ.இ: G/7496 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# வெளிநாடுகளிலிருந்து வருவோர் வீடுகளில் தனிமையில் இருங்கள் இல்லாவிட்டால் கொரோனா முகாம்களுக்கு அனுப்பப்படுவீர்கள்

## வடக்கு சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளில் இருந்து வட மாகாணத்துக்கு வருகை தந்தவர்கள் தாமாக முன்வந்து பரிசோதனைக்ளை மேற்கொண்டு வீடுகளில் தனிமையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கொரோனா வைரஸ் தடுப்பு முகாம்களில் தனிமைப்படுத்தி வைக்கப்படுவீர்கள் என வடக்கு மாகாணச் சுகாதாரப் பிரிவு எச்சரித்தது.

கொரோனா வ்வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பில் அரசாங்கமும் சுகாதாரப் பிரிவினரும் பல்வேறு வழிகளில் மக்களுக்கான ஆலோசனைகளையும் அறிவித்தல்களையும் வழங்கி வருகின்றனர்.

எனவே வெளிநாடுகளில் இருந்துவடக்குமாகாணத்துக்கு வருகை தந்தவர்கள் சுகாதாரத் தரப்பினின் உரிய அறிவுத்தல்களைப் பின்பற்றி வைரஸ் பரவதைத்தடுக்க பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எனவே வெளிநாட்டில் இருந்து வருகை தந்தவர்கள் வீடுகள் மற்றும் விடுதிகளில் தங்கியிருந்தால் அப்பிரதேச பொதுச்சுகாதாரத் தரப்பினருக்கு அறிவித்துவிட்டு 14 நாட்களுக்கு தனிமையில் இருக்க வேண்டும்.

அவ்வாறு செயற்படாவிட்டால் கொரோனா தாக்கம் வடக்கில் அதிகரித்தால் அனைவரையும் அரசாங்கத்தால் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட கொரோனா முகாம்களில் தங்க வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனச் சுகாதாரப் பிரிவு மேலும் எச்சரித்தது. (இ-10)

## மக்களைப் பலியிட்டு அதிகாரத்தை தக்கவைக்க முயற்சி

# பொதுத் தேர்தலை பிற்போட முடியாது என்பதில் அரசின் பொறுப்பற்ற தன்மை வெளிப்படுகின்றது

## ஹிருணிகா காட்டம்! ரணில் தரப்பு மீதும் சாடல்

(கொழும்பு)

பொதுத்தேர்தலை எக்காரணத்திற்காகவும் பிற்போட முடியாது எனச் சுகாதார அமைச்சர் குறிப்பிட்ட கருத்து அரசாங்கத்தின் பொறுப்பற்ற தன்மையை மாத்திரம் வெளிப்படுத்தியுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாப்பதைக் காட்டிலும் அரசாங்கம் பொதுத்தேர்தலில் அதீத கவனம் செலுத்துகின்றது.

இவ்வாறான நெருக்கடி நிலையிலும் சீனாவிற்கு சிறப்பு சலுகைகள் வழங்குவது ஏன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர கேள்வியெழுப்பினார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து மாணவர்களைப் பாதுகாப்பதற்காக இரண்டு வார காலம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவில்லை. ஆசிரிய சங்கத்தினர் நேற்றுத் தொடக்கம் முன்னெடுக்கவிருந்த தொடர் பணிப் புறக்கணிப்பில் இருந்து தப்பித்துக் கொள்ளவே பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டது. இதனைப் பொய்யென்று அரசாங்கத்தால் குறிப்பிட முடியுமா? எனவும் சவால் விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எக்காரணிகளுக்காகவும் பொதுத்தேர்தல் காலம் தாழ்த்தப்படாது என்று சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளமை அவரது பொறுப்பற்ற தன்மையை மாத்திரம் வெளிப்படுத்துகின்றது. இன்றும் இவர்கள் மக்களைப் பலியிட்டு ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளவே முயற்சிக்கின்றார்கள். உலக நாடுகள் இந்தக் கொரோனா வைரஸ் பரவாமல் இருப்பதற்கு முன்னெடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்காமல் மக்களை ஏமாற்றும் செயற்பாடுகள் மாத்திரம் முன்னெடுக்கப்படுகின்றன.



பொதுத்தேர்தலை தற்போது நடத்துவது பிரதான விடயமல்ல, தேர்தலை குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு ஏனும் பிற்போட முடியும். இடைப்பட்ட காலத்தில் கொரோனா வைரஸ் தாக்கம் குறித்து நிரந்தரத் தீர்வினை அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுக்க முடியும். மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் பாடசாலைகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் இரண்டு வார காலம் விடுமுறை வழங்கப்பட்டது. இரண்டு வாரத்திற்குள் அனைத்துப் பிரச்சினைகளையும் அரசாங்கத்தால் சீர் செய்துவிட முடியுமா? மாணவர்களின் மீது அக்கறை கொண்டு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவில்லை.

அரசாங்கத்தின் செயற்பாட்டிற்கு எதிராக நேற்றுத் தொடக்கம் ஆசிரிய சங்கத்தினர் முன்னெடுக்கவிருந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவே விடுமுறை வழங்கப்பட்டது. இதனைத் பொய்யென்று அரசாங்கத்தால் மறுக்க முடியாது.

பொது இடங்களில் மக்கள் கூடுவதற்கு இரண்டு வாரத்திற்கு தடை விதிக்கப்பட்டது. இதனையும் அரசாங்கம் தனக்கு சாதகமாகவே பயன்படுத்திக்கொள்கின்றது.

நாட்டுக்குள் வைரஸ் தொற்றுப் பரவாமல் இருப்பதற்கு இத்தாலி மற்றும் தென்கொரியாவில் இருந்து வரும் இலங்கையர்கள் மாத்திரம் தனிமைப்படுத்தப்படுகின்றார்கள். ஆனால், சீனப் பிரஜைகளுக்கு எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. இதன் பின்னணி என்ன என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் உட்பட அவரை தற்போது சார்ந்துள்ளோரும் ராஜபக்ஷர்களுக்கு ஆதரவான டீல் அரசியலை முன்னெடுத்துச் செல்கின்றார்கள் என்பது அனைவரும் அறிந்த விடயம்: நாட்டு மக்களின் நலன் கருதியே தேர்தலை ஒரு மாதத்திற்கேனும் பிற்போடுமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

ஜனாதிபதி அரசியல் காரணிகளைப் புறம்தள்ளி தேசிய பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் வழங்குவதாக குறிப்பிட்ட வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெந்நீரூற்று கிணறு பகுதியை தற்காலிகமாக மூட நடவடிக்கை



(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள வெந்நீரூற்று கிணறு பகுதியை தற்காலிகமாக மூடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக திருகோணமலை மாவட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரி மொஹான் ஆரியதிலக தெரிவித்தார்.

அதற்கமைய நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் மறு அறிவித்தல் வரும்வரை வெந்நீரூற்று கிணறு சுற்றாடல் பகுதி மூடப்படுவதாக கூறினார்.

இதேவேளை நிலாவெளியில் உள்ள பறவைகள் தீவும் நேற்று முன்தினம் முதல் 2 வார காலத்திற்கு மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக வனஜீவராசிகள் உதவிப் பணிப்பாளர் கீர்த்தி சந்திர ரத்ன தெரிவித்தார். (இ-7)

# எனக்கு கொரோனா தொற்றில்லை

## அமைச்சர் தினேஷ் மறுப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்கு நான் உள்ளாகவில்லை. சிறந்த சுகாதாரத்துடனே உள்ளேன். அனைத்து அரச செயற்பாடுகளையும் பூரணமாக முன்னெடுத்து வருகின்றேன் என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தனது உத்தியோக பூர்வ டுவிட்டர் கணக்கில் பதிவிட்டார். கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளதால் வெளி விவகார அமைச்சர் அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் என சமூக வலைத்தளங்களில் செய்திகள் பரப்பப்பட்டன. இவ்வாறான செய்தியில் எவ்வித உண்மைத் தன்மையும் கிடையாது.

பூரண சுகாதாரத்துடனே நான் உள்ளேன். இதுவரையில் கொரோனா வைரஸ் தொற்றில்லை. அரச செயற்பாடுகளில் முழு ஒத்துழைப்புடன் ஈடுப்ட்டு வருகின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உயர்தர பரீட்சையை ஒத்திவைக்க எந்தத் தீர்மானமுமில்லை - பூஜித

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் தொடர்பில் சமூக ஊடகங்களில் பரவிய வதந்திகளை நிராகரித்த பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி பூஜித, உயர்தரப் பரீட்சையை ஒத்தி வைக்க எந்தவிதத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்தி போலியானது எனவும் அவற்றை நம்ப வேண்டாம் என்றும் வலியுறுத்தினார்.

திட்டமிட்டவாறு க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளானது ஓகஸ்ட் மாதம் இடம்பெறும் என்றும், க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இந்த மாத இறுதியில் வெளியாகும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2020-13.04.2020



விகாரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் சுக்கிரன் சப்தம ஸ்தானத்தில் சந்தித்தபடியே உங்கள் இராசியையே பார்க்கிறார். எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பண நடமாட்டம் அதிகரிக்கும். நினைத்த காரியத்தை செய்து முடிப்பீர்கள். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. பெண் பிள்ளைகளின் திருமணத்தை முன்னிட்டு சீர்வரிசை பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்தலாம்.

சகாய ஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. சகாய ஸ்தானாதிபதி குரு பலம் பெற்று தனாதிபதி செவ்வாயோடு இணைந்து இருப்பதால், கூட்டுத் தொழிலில் இருந்து விடுபட்டு தனித்து இயங்க முற்படுவீர்கள். உடன்பிறப்புகளின் இல்ல திருமண விழாக்களை முன்னின்று நடத்தும் வாய்ப்பு கைகூடி வரும். அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்வீர்கள்.

குரு மங்கள யோகத்தின் காரணமாக இல்லம் தேடி சுபச் செய்திகள் வந்த வண்ணம் இருக்கும். பெண் பிள்ளைகளின் சுபச் சடங்குகள், காதுகுத்து விழா, கல்யாணம், கடை திறப்பு என்று ஏதேனும் ஒரு நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும். தொழிலில் பழைய பங்குதாரர்கள் விலகினாலும் புதியவர்கள் வந்திணைந்து பொருளாதாரத்தை பெருக்கிக் கொடுக்க முன்வருவர். நல்ல நேரத்தில் நல்ல மாற்றங்களே ஏற்படும்.

உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு பகை கிரகமாக விளங்கும் குரு, இம்மாதம் நீச்சம் பெறுவதால் எதிர்பார்த்ததை காட்டிலும் கூடுதலான நற்பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். இம்மாதம் பங்குனி உத்திரத் திருநாள் வருகிறது. அன்றைய தினம் முறையாக விரதமிருந்து முருகப் பெருமானை வழிபாடு செய்யுங்கள். அதுமட்டும் இல்லாமல் தன சப்தமாதிபதி செவ்வாய் உச்சம் பெறும் இம்மாதத்தில், மிச்சம் பெருமளவிற்கு பொருளாதார நிலை உயர செவ்வாய்க்கிழமை தோறும் கந்தனை வழிபடுங்கள்.

மகர செவ்வாய் சஞ்சாரம்

மார்ச் 22 ஆம் திகதி மகர இராசிக்கு செவ்வாய் செல்கிறார். மகர இராசி என்பது செவ்வாய்க்கு உச்சவீடு. எனவே இக்காலம் ஒரு பொற்காலமாகும். தன சப்தமாதிபதியான செவ்வாய் பலம் பெறுவதால், நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். இடம் வாங்க வேண்டும், மனை கட்ட வேண்டும் என்றெல்லாம் சிந்தித்தவர்களுக்கு இப்பொழுது அதற்கான

## உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டும்

யோகம் கைகூடி வரப்போகிறது.

மகர குரு சஞ்சாரம்

மார்ச் 27 ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கிறார். குரு அங்கு நீச்சம் பெறுகிறார். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு, குரு பகை கிரகமாக விளங்குபவர். அவர் வலிமையிழந்து பார்க்கும் பொழுது, உங்களுக்கு நல்ல பலன்கள் ஏராளமாக நடைபெறும். குருவின் பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிவதால் திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். திறமை பளிச்சிடும். உறவினர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். சிக்கலான காரியங்களை கூட எளிதில் முடித்துவிடுவீர்கள். செய்தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். பயணங்களால் பலன் கிடைக்கும். வெளிநாடு செல்லும் யோகம் சிலருக்கு வாய்க்கலாம். விரோதிகள் விலகுவர். அரசியலால் மட்டும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.




ரிஷப சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் சுக்கிரன் மாதத் தொடக்கத்தில் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். மார்ச் 29 ஆம் திகதி ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அஷ்டமாதிபதி அஷ்டம ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்தில் 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கேற்ப சுபபலன்கள் சில நடைபெறும். வீடுமனை வாங்கும் யோகம் வாய்க்கும். சாட்சி கையெழுத்திட்டதின் விளைவாக ஏற்பட்ட சங்கடங்கள் அகலும்.

பெண்களால் பெருமை சேரும். புனித பயணங்களில் ஆர்வம் காட்டுவீர்கள். காசி, இராமேஸ்வரம் போன்ற ஆன்மீக தலங்களுக்கு செல்ல ஆர்வம் காட்டுவீர்கள். இது வரை ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் கைகூடிவரும். கடமையில் இருந்த தொய்வு அகலும்.

நீச்ச புதனின் சஞ்சாரம்

ஏப்ரல் 1 ஆம் திகதி புதன் நீச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் மீன இராசியில் வலிமை இழப்பதால் உத்தியோகத்தில் திடீர் திருப்பங்கள் ஏற்படும். பெரிய நிறுவனங்களில் வேலைக்கு சேர விண்ணப்பம் கொடுத்து, நேர்முக தேர்விற்கு சென்றும் சரியான பதில் கிடைக்காதவர்களுக்கு இப்பொழுது நல்ல பதில் கிடைக்கும். நீண்ட தூர பயணங்களை நிராகரித்து விடுவது நல்லது. இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் மகாலட்சுமியை வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் மகிழ்ச்சி அதிகரிக்கும். சென்ற மாதத்தில் ஏற்பட்ட தடங்கள் அகலும். மனக்குழப்பங்கள் மாறும். மகத்தான காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள். உடல் நலத்தில் ஏற்பட்ட தொந்தரவுகள் மறையும். கணவன் - மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி ஒரு தொகையை செலவிடுவீர்கள். தாய்வழி ஆதரவு எதிர்பார்த்தபடி கிடைக்கும். சகோதரர்களால் மாதத்தின் பிற்பகுதியில் சந்தோஷமான தகவல்கள் வந்துசேரும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பங்குனி உத்திர நாளில் முருகப்பெருமானையும், வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகையையும் வழிபடுங்கள்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விகாரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், தன ஸ்தானத்தில் தன, பஞ்சமாதிபதி குருவோடு இணைந்திருக்கிறார். எனவே நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறைய நடைபெறும். தொட்டது துலங்கும். தொகை வரவு இரு மடங்காகும். உற்றார்-உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தை கண்டு ஆச்சரிப்படுவர்.

சந்தர்ப்பங்கள் எல்லாம் உங்களுக்கு சாதகமாக அமையப் போகிறது. தனஸ்தானம் வலிமையாக இருப்பதால், எதை எந்த நேரத்தில் செய்ய வேண்டுமென்று நினைத்தீர்களோ, அதை அந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். முக்கிய புள்ளிகளின் ஒத்துழைப்போடு முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். ஒரு தொழில் செய்வோர் இரு தொழில் செய்யும் சூழ்நிலை அமையும்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வுபெற்று, தனியாக தொழில் செய்வது பற்றி சிந்திப்பார்கள். மாற்று இனத்தவர்கள் உங்களுக்கு மகிழ்ச்சியான பாதை அமைத்துக் கொடுப்பர். விட்டுப்போன சொந்தங்கள் எல்லாம் திரும்பி வந்து சேரும். தட்டிப்போன வாய்ப்புகள் எல்லாம் தானாக வந்து குவியும். கெட்டிமேளம் இல்லத்தில் கேட்கும். தீர்த்த யாத்திரைகளும், தெய்வ தரிசனங்களும் அதிகரிக்கும்.

ஏழரைச் சனியில் பாத சனியின் ஆதிக்கம் நடப்பதால், இனி சாதகமான பலன்கள் உங்களுக்கு வந்து சேரும். விலகிப்போன சனி உங்கள் விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றுவார். கலக்கங்கள் அகலவும், காரியங்களில் வெற்றி கிடைக்கவும், கடவுள் வழிபாடு உங்களுக்கு கைகொடுக்கும். உங்கள் இராசிநாதன் உச்சம் பெறும் மாதம் இது என்பதால், உடல் ஆரோக்கியம் சீராகும்.

இம்மாதம் பங்குனி உத்திரத் திருநாள் வருகிறது. 2 இல் கேதுவும், 8 இல் ராகுவும் இருப்பதால், அனுதினமும் ஆனைமுகப் பெருமானை வழிபடுவதோடு, வள்ளி - தெய்வானை சமேத வடிவேல் முருகனை உள்ளத்தில் நினைத்து உத்திரத்தன்று அபிஷேக ஆராதனைகளும் செய்தால் உயர்வு கிட்டும்.

மகர செவ்வாய் சஞ்சாரம்

மார்ச் 22 ஆம் திகதி மகர இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிநாதன் வெற்றிகள் ஸ்தானத்திற்கு செல்லும் இந்த நேரத்தில், உங்கள் எண்ணங்கள் எல்லாம் நிறைவேறும்.

புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வரும் வாய்ப்பும், புகழ்மிக்கவர்களின் ஒத்துழைப்

## வசதி வாய்ப்புக்கள் பெருகும் நேரம்

போடு புதிய முயற்சிகளில் வெற்றியும் கிடைக்கும். உடன்பிறப்புகளால் கூடுதல் நன்மை கிட்டும். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு.

இருக்கும் வீட்டை மாற்றியமைக்க முன் வருவீர்கள். சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும் நேரமிது.

மகர குரு சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் மகரத்திற்கு சென்று நீச்சம் பெற்றாலும், உச்சம் பெற்ற செவ்வாயோடு இணைவதால், 'நீச்சபங்க இராஜயோகம்' செயல்படுகிறது. இதனால் பணப்புழக்கம் நன்றாகவே இருக்கும்.

இருப்பினும் ஒரு தொகை செலவழிந்த பிறகே அடுத்த தொகை கைக்கு கிடைக்கும். உடன்பிறப்புகளின் இல்லத் திருமண விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். பஞ்சாயத்




துக்கள் நல்ல முடிவுக்கு வரும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். புதிய நண்பர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உயரும்.

ரிஷப சுக்கிரன் சஞ்சாரம்

சுக்கிரன் உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். அவர் ரிஷப இராசிக்கு மார்ச் 29 ஆம் திகதி செல்கிறார். உங்கள் இராசிக்கு 7 ஆம் அதிபதி 7 இல் வரும்பொழுது, வாழ்க்கை ஒளிமயமானதாக அமையும். வசதி, வாய்ப்புகள் பெருகும். உற்சாகத்துடன் செயல்பட்டு உயர்நிலையை அடைய சந்தர்ப்பங்கள் கூடி வரும். வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுப்பதில் இருந்த தடைகள் அகலும். தங்கம், வெள்ளி மற்றும் புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

மீன புதன் சஞ்சாரம்

ஏப்ரல் 1 ஆம் திகதி மீன இராசிக்கு புதன் செல்கிறார். அங்கு அவர் நீச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு அஷ்டமாதி பதியான புதன் நீச்சம் பெறுவதால், நல்ல சந்தர்ப்பங்கள் நாடி வரும்.

கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். நீண்ட நாளைய எண்ணம் நிறைவேறும். தந்தை வழியில் ஆதரவும், அனுகூலமும் உண்டு. நட்பால் நல்ல காரியம் நடைபெறும். குடும்ப வருமானத்தை உயர்த்த, நீங்கள் எடுத்த புதிய வழிமுறைகள் அனுகூலத்தைத் தரும் இம்மாதம் திங்கட்கிழமை தோறும் விநாயகரையும், வியாழன் தோறும் குரு தட்சிணாமூர்த்தியையும் வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் நினைத்தது நிறைவேறும். ஆரோக்கியம் சீராகும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்க, உறவினர்களின் ஒத்துழைப்பு நல்குவர். ஆதாயம் தரும் தகவல்கள் வந்து சேரும். ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு.

கணவன் - மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு உன்னத வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள். தாய் வழியில் எதிர்பார்த்த ஒத்துழைப்பு கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகளை மேலதிகாரிகள் வழங்குவர்.

கட்டிய வீட்டை பழுது பார்க்கும் யோகம் ஏற்படும். உடன்பிறப்புகளின் திருமணங்களை முடித்து மகிழ்ச்சி காண்பீர்கள். ஆனைமுகன் வழிபாடும், அனுமன் வழிபாடும் ஆனந்தம் வழங்கும்.

(தொடரும்)

# 'விடுதலைப்புலிகள் மக்கள் பேரவை' சுயேட்சையாக போட்டியிட தீர்மானம்



(மன்னார்)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முன்னாள் போராளிகளுக்கு சரியான ஆசன ஒதுக்கீட்டை வழங்காத நிலையில் "விடுதலைப் புலிகள் மக்கள் பேரவை" எனும் சுயேட்சைக் குழு சார்பில் முன்னாள் போராளிகள் வடக்கு-கிழக்கில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவுள்ளதாக வடமாகாண முன்னாள் அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"விடுதலைப்புலிகள் மக்கள் பேரவை" கட்சி ஊடாக எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிட உள்ளேன். கடந்த வாரம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவசர கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தேன்.

2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் இன்று வரை எமது அரசியல் நீரோட்டத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பிரசாரத்தில் இருப்பது விடுதலை புலிகளின் தியாகங்களும் வீரச் செயல்களும். எனவே முன்னாள் போராளிகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பது கட்டாயமானது. எனவே வடக்கு-கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களிலும் முன்னாள் போராளிகளை முன்னுரிமை அடிப்படையில் அவர்களை உள்வாங்குங்கள். கடந்த காலங்களில் எமது இனத்திற்காக விதைக்கப்பட்ட உயிர்களுக்கு நாம் அர்த்தம் தேட வேண்டுமாக இருந்தால் உண்மையாக தேசியத் தலைவரினால் வளர்க்கப்பட்டவர்களை உள்வாங்கி இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்திருந்தேன். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் விடுத்த கோரிக்கைக்கு இது வரை எவ்வித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை.

இதனை உணர்ந்த விடுதலைப்புலிகள் மக்கள் பேரவை சுயேட்சையாக போட்டியிட தீர்மானித்துள்ளார்கள். தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முன்னாள் போராளிகளுக்கு சரியான ஆசன ஒதுக்கீட்டை வழங்குவதாக இருந்தால் சுயேட்சைக்குழு சார்பில் முன்னாள் போராளிகள் போட்டியிடுவது தொடர்பில் பரிசீலிக்கப்படும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இவ் விடயத்தில் உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். போராளிகளுக்கான ஆசன ஒதுக்கீட்டை கொடுப்பீர்கள் என்றால் எதிர்காலத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பலமாகக் கட்டி எழுப்புவதற்கு இது ஒரு சந்தர்ப்பமாக அமையும் என மேலும் தெரிவித்தார். (9-285-299)

# 'சிவ தரிசனம்' பத்திரிகை வெளியீடு



(மன்னார்)

மன்னாரில் "சிவ தரிசனம்" மாதாந்த சைவ செய்திப் பத்திரிகை வெளியீட்டு விழாவும் 2019 ஆம் ஆண்டு உயர் தர பிரிவில் சிறப்பு சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் மன்னார் ஞான வைரவர் தேவஸ்தானத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட இந்து சமய வளர்ச்சி சங்கத்தின் அனுசரணையில் வெளிவரும் குறித்த பத்திரிகையானது, மன்னார் மாவட்டத்தில் நடைபெறும் சைவ கலாச்சார நிகழ்வுகளை தாங்கி வெளிவரவுள்ளது.

மேலும் சைவ சித்தாந்த கருத்துக்களையும் சைவத்தின் தொண்மையான கலாச்சார விழுமியங்களினை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் நோக்கில் குறித்த "சிவதரிசனம்" பத்திரிகை வடிவமைக்கப்பட்டுள்ளது.

குறித்த பத்திரிகையின் முதல் பிரதியை திருக்கேதீச்சர திருப்பணிச்சபையின் இணைச் செயலாளர் எஸ்.இராமக் கிருஸ்ணன் வெளியிட்டு வைக்க மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் தலைவர் வைத்தியர் கதிர்காமநாதன் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில் வைத்தியர் சக்தி பாலன், திருக்கேதீச்சர திருப்பணிச் சபையின் பிரதம சிவாச்சாரியாரான கருணானந்த குருக்கள் , மன்னார் இந்து சமய வளர்ச்சி சங்க தலைவர் அரசக்கோன், மன்னார் சைவ ஆலயங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (9-285)

# சிறுபோக நெற் செய்கைக்காக முத்துஐயன்கட்டு குளம் திறப்பு

(முல்லைத்தீவு)

இந்த ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை மற்றும் மேட்டுநில பயிர்ச்செய்கைக்காக முத்துஐயன் கட்டுகுளம் நேற்று திறந்து விடப்பட்டுள்ளதாக விவசாய அமைப்புகள் தெரிவித்துள்ளன.

முத்துஐயன்கட்டு குளத்தின் கீழான விவசாய செய்கை தொடர்பில், சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள், விவசாயிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்தே நேற்று இந்தக் குளம் திறந்து விடப்பட்டுள்ளது.

நடப்பாண்டில், குளத்தின் கீழ் 3,600 ஏக்கர் நெற்செய்கையும் 1,600 ஏக்கர் வரையிலான உப உணவு செய்கைக்குமாக குளத்தின் நீர் திறந்து விடப்பட்டது.

முத்துஐயன்கட்டு குளத்தில் 23 அடி 6 அங்குலம் நீர் மட்டம் காணப்படும் நிலையில், ஜூலை 20 ஆம் திகதி வரை நீர் திறந்து விடப்படவுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (9)

# அறிவித்தலையும் மீறி இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள்

(தருமபுரம்)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக அனைத்து தனியார் கல்வி நிலையங்களிலும் கற்றல் நடவடிக்கைகளை நிறுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநரால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும்,

கிளிநொச்சி மாவட்டத்தில் பல கல்வி நிலையங்களில் கற்றல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைய சில கல்வி நிலையங்கள் கற்றல் செயற்பாடுகளை இடைநிறுத்தி வைரஸ் தொற்றை தடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ள போதும் சில கல்வி நிலையங்கள் சுயலாபம் கருதி கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-316)






இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் "உயர்த்தும் கரங்கள்" செயற்குழுவின் அனுசரணையில் முல்லைத்தீவு மாவட்டம் சண்முகரத்தினம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த, போரால் பாதிக்கப்பட்ட மாணவி ஒருவருக்கு நேற்று துவிச்சக்கரவண்டி ஒன்று வழங்கி வைக்கப்பட்டது.

# வவுனியாவில் தங்கியிருந்த வெளிநாட்டு குடும்பத்தை பரிசோதனைக்குட்படுத்த பொலிஸார் நடவடிக்கை

(நெளுக்குளம்)

வவுனியா இராசேந்திரகுளம் பகுதியில் வெளிநாட்டில் இருந்து வருகைதந்து உறவினர் வீட்டில் தங்கியிருந்த குடும்பத்துக்கு கொரோனா வைரஸ் தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் வைத்திய பரிசோதனைக்காக பொலிஸார் அழைத்துச் சென்றுள்ளனர்.

வவுனியா இராசேந்திர குளத்தில் வெளிநாட்டில் இருந்து வந்து உறவினர் வீட்டில் ஒரு குடும்பம் தங்கியிருப்பதாக பொலிஸாருக்கு பொதுமக்களினால் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று குறித்த இடத்திற்குச் சென்ற வவுனியா பொலிஸார் விசாரணையினை மேற்கொண்டிருந்தனர்.

பெல்ஜியத்தில் இருந்து நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகைதந்த கணவனும் கடந்தமாத இறுதியில் வருகை தந்திருந்த மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுமே கொரோனோ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வுள்ளார்கள். இவர்கள் பரிசோதனைக்காக வவுனியா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (9-299)



கொரோனா வைரஸில் இருந்து உலக மக்களைக் காக்க வேண்டி மன்னார் உப்புக்குளம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் கோவிலில் நேற்று விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ மஹா தர்மகுமாரக்குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த வழிபாட்டில் ஆலயத்துக்கு வருகை தந்த அடியவர்கள் நெய்விளக்கு ஏற்றி பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (9-286)

# கிளி.அக்கராயன் குளத்தில் ஆகாயத்தாமரை படர்கை நன்னீர் மீன்பிடி பாதிப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி அக்கராயன் குளத்தில் நன்னீர் மீன்பிடியை நம்பி 55 குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தினை முன்னெடுத்து வருகின்றனர். இவர்கள் ஆகாயத்தாமரை என்ற தாவரப்படர்கையினால் 10 ஆண்டுகளாக பெரும் சவால்களை எதிர் கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

தமது வாழ்வாதாரத்தினை முன்னெடுத்து செல்ல முடியாத நிலையில் மீனவர்கள் பெரும் சவால்களை எதிர்கொண்டு வருவதுடன். ஆகாயத்தாமரை மற்றும் அதனுடன் இணைந்து படர்ந்து வரும் ஓர் வகை புல்லினத்தை அழித்து. தமது வாழ்வாதாரத்தினை முன்னெடுத்து செல்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு தருமாறு மீனவர்களால் பல தரப்பினரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை குறித்த குளத்தில் மீன்குஞ்சுகள் விடப்பட்டு தமது வாழ்வாதாரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி தர வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறித்த கோரிக்கைகள் படையினர் உள்ளிட்ட பல தரப்பினரிடம் முன்வைக்கப்பட்டதாகவும், ஆகாய தாமரையை அழிப்பதற்கான இயந்திரங்கள் இல்லாமையால் அதனை தம்மால் அழிக்க முடியாது உள்ளதாக படையினர் தெரிவித்ததாக கூறும் மீனவர்கள், குறித்த இயந்திரத்தை பெற்றுத்தந்தால் தாம் அழித்து தருவதாக படையினர் தெரிவித்ததாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிலையில் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன். இராமநாதனிடம் குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. குறித்த குளத்தை 80 மில்லியன் நிதியில் ஆழப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கைகள் இவ்வருடம் ஆரம்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது; குளத்தின் பெரும்பகுதி குறித்த தாவரத்தின் ஆக்கிரமிப்பில் உள்ளது. இதனால் மீனவர்கள் தமது தொழிலை முறையாக முன்னெடுக்க முடியவில்லை என குற்றம் சாட்டுகின்றனர்.

55 தொழிலாளர்கள் குறித்த குளத்தை நம்பி வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வரும் நிலையில், தற்போது 15 பேருக்கு குறைவானவர்களே தொழிலில் ஈடுபடுகின்றனர் எனவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (9-100)

## சிறுமி துஷ்பிரயோகம்; இளைஞர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் 15 வயது சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் 33 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா கற்பகபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தாயார் வேலைக்குச் சென்றிருந்த போது வீட்டில் எவரும் இல்லாத நிலையில் 15 வயது சிறுமி வீட்டில் தனிமையில் நின்றுள்ளார்.

இதன்போது குறித்த வீட்டாருடன் முன்னரே அறிமுகமான குறித்த இளைஞர் வீட்டுக்கு வந்து குறித்த சிறுமியை துஷ்பிரயோகம் செய்ததாக தாயாரால் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் கடந்த சனிக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த பூவரசங்குளம் பொலிஸார் சிறுமியை அழைத்து மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் வாரிக்குட்டியூர் 5 ஆம் யுனிற்றை சேர்ந்த 33 வயது இளைஞன் ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்து வவுனியா நீதிமன்றில் முற்படுத்தினர். இதன்போது குறித்த இளைஞனை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (9-250)


## பொதுக்கூட்டம் பிற்போடல்

(குருமன்காடு)

வவுனியா அழகக கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவிருந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் ஜெ.ஜெகராசா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வவுனியா உட்பட பல மாவட்டங்களில் பொதுமக்கள் அச்ச நிலையில் காணப்படுவதனால் இக் காலப்பகுதியில் வருடாந்த பொதுக்கூட்டம் நடத்துவது சிறந்தது அல்ல. இதன் காரணமாக இன்று ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதுடன் பொதுக்கூட்டம் தொடர்பான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்பதுடன் வழமைபோன்று சிகையலங்கார நிலையங்களை திறக்குமாறும் வைரஸ் தொற்று அச்சம் காரணமாக சிகையலங்கார நிலையங்களில் பணியாற்றும் உரிமையாளர்கள், பணியாளர்கள், பயிலுநர்கள் அனைவரையும் முகத்திற்கு மாஸ்க் அணியுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (9-250)

# கொரோனாவிலிருந்து மக்களை காக்க வேண்டி விசேட வழிபாடுகள்



(நெளுக்குளம்)

கொரோனா வைரஸில் இருந்து உலக மக்களை காக்க வேண்டி வவுனியாவில் நேற்று முன்தினம் யாக பூஜை இடம்பெற்றது. வவுனியா தோணிக்கல் விசாலாட்சி அம்பிகா சமேத விஸ்வநாதர் திருக்கோவில் நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ் வழிபாட்டினை பிரபாகரக்குருக்கள் தலைமையேற்று நடத்தியிருந்தார்.

இதன்போது கொரொனா வைரஸ் தாக்கத்திற்குள்ளாகியுள்ள மக்களின் நல்வாழ்வுக்கான பிரார்த்தனைகள் இடம்பெற்றதுடன் விசேடயாக பூஜையும் இடம்பெற்றிருந்தது. இதேவேளை ஆலயத்திற்கு வருகை தந்த அனைத்து அடியார்களும் உலக மக்களுக்காக நெய் விளக்கேற்றி வழிபாடுகளிலும் ஈடுபட்டதுடன் தமிழருவி சிவகுமாரனின் சிறப்புரையும் இடம் பெற்றிருந்தது. (9-299)



(குருமன்காடு)

கொரோனா வைரஸில் இருந்து உலக மக்களைக் காக்க வவுனியா ஆதிவிநாயகர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்றுக் காலை 8.30 மணிக்கு இடம்பெற்றது. வவுனியா வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலய நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த வழிபாடு சிவஸ்ரீ சஞ்சிவி காந்த குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கொரோனா வைரஸ் தாக்கத்திற்குள்ளாகியுள்ள மக்களின் நல்வாழ்வுக்கான பிரார்த்தனைகள் இடம்பெற்றதுடன் ஆலயத்திற்கு வருகை தந்த அனைத்து அடியார்களும் உலக மக்களுக்காக நெய் விளக்கேற்றி வழிபாடுகளில் ஈடுபட்டனர். (9-250)

# கட்டாக்காலி மாடுகளை பிடிக்கும் நகரசபை அவற்றை ஒழுங்காக பராமரிப்பதில்லை

## உரிமையாளர்கள் விசனம்

(நெளுக்குளம்)

நகரத்தில் திரியும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் வவுனியா நகரசபை ஒழுங்காக பராமரிப்பதில்லை என அதன் உரிமையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரத்தினுள் கட்டாக்காலியாகத் திரியும் மாடுகளினால் அண்மைக்காலமாக அதிகளவான விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனை தடுக்கும் நோக்கில் நகரசபையினால் கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பிடிக்கப்படும் கட்டாக்காலி மாடுகள் நகரசபை பூங்காவிற்கருகில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு பராமரிக்கப்படும் மாடுகளுக்காக நாள் ஒன்றிற்கு 300 வீதம் தண்டப்பணமும் உரிமையாளர்களிடம் இருந்து நகரசபையினால் அறவிடப்படுகின்றது.

இந்நிலையில் கடந்த நான்கு நாட்களுக்கு முன் கட்டாக்காலியாக திரிந்த மாடுகள் பிடிக்கப்பட்டு நகரசபை பூங்காவிற்கு அருகில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இம்மாடுகளுக்கு நீரோ, உணவுகளோ ஒழுங்காக வழங்கப்படாததோடு, உரிய முறையிலும் பராமரிக்கப்படவில்லை என்று உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இதற்கான பணம் மட்டும் தங்களிடம் நகரசபை பெறுகின்றது எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நகரசபை தலைவர் இ.கௌதமனிடம் கேட்ட போது, வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்கத்திலேயே கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்படுகின்றன. மேலும் இவ்வாறு பிடிக்கப்படும் மாடுகளுக்கான நிதி ஒதுக்கப்பட்டு சீரான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு பராமரிக்கப்படும் முறை தொடர்பாக ஏதும் முறைப்பாடுகள் இருப்பின் அது தொடர்பாக கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்தார். (9-299)




# கொரோனா தடுப்பு பொலிஸாரின் விழிப்புணர்வு



(நெளுக்குளம்)

தற்போது உலக நாட்டு மக்களை பீதியில் ஆழ்த்தியுள்ள கொரோனா வைரஸ் இலங்கையில் பரவி வரும் நிலையில் இதனை தடுக்கும் முகமாக வவுனியா பொலிஸார் விசேட முன்னோடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

வவுனியா பொலிஸ் நிலையத்தின் பிரதான நுழைவாயில் அருகே கையை சுத்தப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்குள்ளே வரும் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கைகளை சுத்தப்படுத்திய பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இச்செயற்பாடானது அனைத்து சமூகத்திற்கும் முன்னோடியாக விளங்குகின்றது. பொதுமக்கள் அனைவரும் இந்நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கி வருகின்றனர். (9-299)

# கிளிநொச்சியில் 21 ஆயிரத்து 700 ஏக்கரில் சிறுபோகம்

# விவசாயிகளுக்கு உரமானியம் வழங்க நடவடிக்கை

## அரச அதிபர் உறுதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள 21 ஆயிரத்து 700 ஏக்கர் சிறுபோக நெற்செய்கைக்கான உரமானியத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

உரமானியம் தொடர்பில் விவசாயிகளுக்கு அறிவித்தல் விடுக்கப்படாத நிலையில் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை சிறுபோக நெற்செய்கைக்காகத் திறக்கப்படவுள்ள இரணைமடு நீரினைப் பயன்படுத்தி கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சிறுபோகத்தை மேற்கொள்வதா? என்ற சந்தேகத்தை வலம்புரிப்பத்திரிகை வாயிலாகத் தெளிவுபடுத்துமாறு விவசாயிகள் கோரியதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருடன் தொடர்பு கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் சிறுபோக நெற்செய்கையில் இரணைமடுக் குளத்தை நம்பி 15 ஆயிரம் ஏக்கரும் ஏனைய குளங்களை நம்பி 6 ஆயிரத்து 700 ஏக்கரும் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு தேவையான உரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-10)

# பாரதம்

## நிர்பயா கொலை வழக்கு விவகாரம்; குற்றவாளிகளை தூக்கிலிட தயாராகுமாறு சிறை நிர்வாகம் உத்தரவு பிறப்பிப்பு



(டில்லி)

நிர்பயா கொலை வழக்கின் குற்றவாளிகளை எதிர்வரும் 20 ஆம் திகதி தூக்கிலிட டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், அவர்களைத் தூக்கிலிடும் பணியில் ஈடுபட மூன்று நாட்களில் தயாராகுமாறு மீரட் சிறை ஊழியருக்கு திகார் சிறை நிர்வாகம் உத்தரவிட்டது.

டில்லியில் கடந்த 2012 இல் ஓடும் பேருந்தில் துணை மருத்துவ மாணவி நிர்பயா பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை செய்யப்பட்ட வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முகேஷ்குமார்சிங் (வயது-22), பவன்குமார் குப்தா (வயது25), வினய் சர்மா (வயது-26), அக்ஷய் குமார்சிங்(வயது-31) ஆகியோருக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 5.30 மணிக்கு தூக்குத் தண்டனையை நிறைவேற்ற டில்லி நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது.

இந்நிலையில், திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நால்வரையும் தூக்கிலிடுவதற்கு இன்னும் 5 நாட்களே உள்ளன. அவர்களைத் தூக்கிலிடும் சிறை ஊழியர் திகார் சிறைக்கு மூன்று நாட்களில் வருமாறு அறிவுறுத்தப்பட்டார். இதை திகார் சிறையின் அதிகாரி உறுதிப்படுத்தினார்.

நிர்பயா குற்றவாளிகள் தங்களது தூக்குத் தண்டனையை நிறுத்திவைக்க உத்தரவிடக் கோரும் சட்டத் தீர்வுகளை மேற்கொண்டதால் மூன்று முறை அவர்களுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனை நிறைவேற்றும் உத்தரவு தள்ளி வைக்கப்பட்டது. இந்நிலையில் அவர்களுக்கு மார்ச் 20 இல் தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் புதிய உத்தரவை டில்லி நீதிமன்றம் அண்மையில் பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## பக்கிங்ஹாம் அரண்மனையை விட்டு வெளியேறினார் எலிசபெத் மகாராணி!



(பிரிட்டன்)

கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையானது பிரிட்டனில் அதிகரித்து வருவதனால் இரண்டாம் எலிசபெத் மகாராணி பக்கிங்ஹாம் அரண்மனையை விட்டு வெளியேறியுனார்.

கொரோனா தொடர்பான பிரிட்டன் அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து மகாராணியின் உடல் நலனைக் கருத்திற் கொண்டே 93 வயதான இரண்டாம் எலிசபெத் மகாராணியும், 98 வயதான அவரது கணவர் பலிப்பும் அரண்மனையை விட்டு வெளியேறினர்.

அண்மைக் காலத்தில் இரண்டாம் எலிசபெத் மகாராணி பக்கிங்ஹாம் அரண்மனையில் அநேகமானோரை சந்தித்தார். சிறந்த உடல் நலத்துடன் இருக்கும் மகாராணியின் 94 ஆவது பிறந்தநாள் இன்னும் சில வாரங்களில் நடைபெற உள்ளது.

இந்நிலையில் அவர் தொடர்ந்தும் அரண்மனையில் இருந்தால் அவரை காணவரும் ஏனையோரால் அவருக்கு வைரஸ் தொற்று ஏற்படக் கூடும் என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் அவர் அங்கிருந்து வெளியேறினார். பக்கிங்ஹாம் அரண்மனையை விட்டு வெளியேறியுள்ள மகாராணியும் அவரது கணவர் பிலிப்பும் வின்ட்சர் கோட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ஜ-2)

# 6 ஆயிரத்து

# காவுகொண்


## அதிர்ச்சியில் உலக ந

(ஜெனீவா)

### உலகையே அச்சுறுத்திவரும் கொரோ (கொவிட்-19) தொற்றுக்கு உயிரிழந் எண்ணிக்கை 6,500ஆக அதிகரித்து

ஜோன் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் மதிப்பீட்டின்படி இந்த எண்ணிக்கை அறிவிக்கப்பட்டாலும், உலக சுகாதார அமைப்பு இந்த எண்ணிக்கையினை கண்காணித்து வருகிறது.

அத்துடன், உலக சுகாதார அமைப்பின் அறிக்கையின்படி, 153,000 இற்




(ரோம்)

கொரோனா வைரஸ் காரணமாக வழிபாட்டாளர்கள் இல்லாமலேயே இந்த ஆண்டு அதன் பாரம்பரிய ஈஸ்டர் வார பிரார்த்தனைகள் நடத்தப்படும் என்று வத்திக்கான் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அறிவித்துள்ளது.

சீனாவில் உருவான கொரோனா எனும் கொடிய வைரஸ் நோய் கார

# இத்தாலியில் இரட்டிப்பாகும் இறப்பு இதுவரை 1809 பேர் உயிரிழப்பு!



(ரோம்)

இத்தாலியில் அசுர வேகத்தில் பரவும் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றுக்கு ஒரே நாளில் 368 பேர் உயிரிழந்துள்ளதாக நாட்டின் சிவில் பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1809 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், 21,157ஆக இருந்த கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 24,747 ஆக உயர்ந்துள்ளது.

இத்தாலியின் வடக்குப் பிராந்தியத்தில் முதலில் பரவிய கொரோனா வைரஸ் கிட்டத்தட்ட 10 இற்கும் மேற்பட்ட நகரங்களில் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. ரோம், மிலன், வெனிஸ் உள்ளிட்ட பகுதிகளில் மக்கள் வெளியே வர கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

கொரோனா வைரஸ் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வேகமாகப் பரவி வருவதால் மக்கள் வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டாம் என்றும் மருந்து, உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வாங்க மட்டுமே வெளியில் வரும்படியும், வீட்டிலேயே இருக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டனர்.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# வெளிநாடு

# து 500 உயிர்களை

# ண்ட கொரோனா!

## க நாடுகள்

கொரோனா வைரஸ்
பிரிழுந்தவர்களின்
ரித்துள்ளது.



கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர். மேலும், அமெரிக்காவில் மிக வேகமாகப் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு 3,400 பேர் பாதிக்கப்பட்டனர். அத்துடன் 65 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

அமெரிக்கா தேசிய அவசர நிலையை அறிவித்துள்ளது.

மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்றான குவாத்தமாலாவில் கொரோனா வைரஸ் தொற்றினால் முதல் உயிரிழப்பு பதிவாகியுள்ளது. (ஜ-2)

# ஈஸ்டர் பிரார்த்தனைக்கு நேரடியாக வரவேண்டாம்

## வத்திக்கான் அறிவிப்பு

ணமாக இத்தாலியில் இதுவரை 1000த்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன் அங்கு 21 ஆயிரத்திற்கும் அதிகமான மக்களுக்கு நோய்த் தொற்று உறுதியான நிலையில் அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டனர்.

தலைநகர் ரோமில் உள்ள தன்னாட்சி பெற்ற நாடான வாடிகனும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கொரோனா வைரஸ் நோய் பரவல் அச்சம் காரணமாக நூற்றுக்கணக்கான மக்கள் வருகை தரும் வாடிகனின் புகழ்பெற்ற தேவாலயம் தற்போது வெறிச்சோடிக் காணப்படுகிறது.

கடந்த வாரம் அங்குள்ள சிற்றாலயத்தில் பாப்பரசர் தனியாகவே பிரார்த்தனை நடத்தியதை உலகம் முழுவதுமுள்ள ஊடகங்கள் இதுவரை இல்லாத ஒரு வரலாற்று சம்பவமாக ஒளிபரப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# பிரான்ஸில் கொரோனாவால் 60 வயதிற்குட்பட்டவர்களே பாதிப்பு



(பாரிஸ்)

பிரான்ஸில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில், 50 சதவீதத்துக்கும் அதிகமான வர்கள் 60 வயதிற்குட்பட்டவர்கள் என நாட்டின் தேசிய சுகாதார நிறுவனத்தின் தலைவர் ஜெரோம் சாலமன் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக கடந்த சனிக்கிழமை நடைபெற்ற விசேட செய்தி மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், 'தீவிர சிகிச்சையில் உள்ள 300 கொரோனா வைரஸ் நோயாளிகளில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் 60 வயதிற்குட்பட்டவர்கள்.

பெரியவர்களிடையே கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களும் உள்ளனர்.


மேலும் தீவிர சிகிச்சையில் 50 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் 60 வயதிற்குட்பட்டவர்கள் என்பதை உங்களுக்கு நினைவூட்டுகிறேன்' என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## கொரோனா வைரஸ் பற்றிய செய்தித் துளிகள்

### ஈரானில் மீட்கப்பட்ட மேலும் 53 இந்தியர்கள் வந்து சேர்ந்தனர்



### ட்ரம்புடன் இங்கிலாந்து பிரதமர் தொலைபேசியில் பேச்சு



### கொரோனா வைரஸ் - சிங்கப்பூர் முருகன் கோவிலில் பங்குனி தேரோட்டம் இரத்து



### சிறைக்கைதிகள் தயாரித்த 2 ஆயிரம் முகக்கவசங்கள்



# ஏப்ரல் 25 பொதுத் தேர்தல் முற்றிலும் தவறான தீர்மானம்

## விஜிதமுனி சொய்ஷா எதிர்ப்பு

(கொழும்பு)

**ஏப்ரல் 25 ஆம் திகதி பொதுத்தேர்தலை நடத்த தீர்மானித்துள்ளமை முற்றிலும் தவறான தீர்மானமாகும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜித் விஜிதமுனி சொய்ஷா தெரிவித்தார்.**



ஐக்கிய மக்கள் சக்தியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொரோனா வைரஸ் ஒரு தேசிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இந்நிலையில் ஏப்ரல் 25 ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆனால், பொதுத் தேர்தலை ஒரு மாத மேனும் பிற்போடுமாறு அரசாங்க தரப்பை தவிர அனைவரும் மக்களின் நலன் கருதி கோரிக்கை விடுத்துள்ளோம். ஆனால் அரசாங்கம் தேர்தலை நிச்சயம் நடத்த வேண்டும் என்று உறுதியாகவுள்ளது.

பொதுத்தேர்தலை இலக்காகக் கொண்டு மாத்திரம் அரசாங்கம் தற்போது செயற்பட்டுக் கொள்கின்றது. எனவே மக்களே சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# காலச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு விசேட மத ஒன்றுகூடல்களைத் தவிர்க்கவும்

## வடக்கு ஆளுநர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் அச்சம் நிலவும் சூழ்நிலையில் ஆலயங்கள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களில் இடம்பெறும் விசேட ஒன்றுகூடல்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வடமாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வேண்டுகோள் விடுத்தார்.

உலகளாவிய ரீதியில் கொரோனாத் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் இலங்கையிலும் அதன் தாக்கம் வேகமெடுத்துள்ளது.

இதன் காரணமாக அரசாங்கம் நாட்டு மக்களுக்கு கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பல்வேறு அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது.

இதற்கு வடக்கு வாழ் மக்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

வடக்கு மாகாணத்திலுள்ள ஆலயங்கள் மற்றும் ஏனைய மத வழிபாட்டிடங்களில் பொது மக்கள் அதிகம் ஒன்றுகூடும் விசேட மத வழிபாடுகளை காலச் சூழ்நிலையைக்கருத்தில் கொண்டு மட்டுப்படுத்தி அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் மேலும் வேண்டுகோள் விடுத்தார். (இ-10)

# நாடளாவிய ரீதியில் 4300 கிலோ மீற்றருக்கு இதுவரை மின்சார வேலிகள் அமைப்பு

## ஆளுநர் அலுவலகக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையிலானபிணக்குகளைத்தீர்க்கும் வழிவகைகள் தொடர்பில் ஆராயும் சிறப்பு கலந்துரையாடல் கடந்த 12 ஆம் திகதி ஆளுநர்செயலகத்தில்இடம்பெற்றது.

யானைகளைப் பாதுகாப்பது தொடர்பிலும் யானைகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பது தொடர்பிலும் விசேட நிபுணத்துவம் வாய்ந்த அதிகாரிகளின் ஆராய்ச்சி முன்மொழிவுகளுடன் இவ் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது துறை சார்ந்த விசேட நிபுணர்கள், பொறுப்புடைய திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலின் போது மிருகங்கள் மற்றும் இயற்கை வளப்பாதுகாப்பு தொடர்பிலான அமைப்புக்களைச் சேர்ந்த பேராசிரியர் லக்டாஸ் பெர்னாண்டோ மற்றும் வைத்திய கலாநிதி பிரிதிவிராஜ் பெர்னாண்டோ ஆகியோர் பயனுள்ள பல தகவல்களை பகிர்ந்திருந்தனர்.

யானைகள்அழிவடைவதையோ யானைகளால் மனித உயிர்கள் போவதையோ தடுக்கும் வகையில் பரஸ்பரம் முன்னெடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு மற்றும் முகாமைதுவம் தொடர்பில் இதன் போது விசேட கவனமெடுக்கப்பட்டது.

பயிர்ச்செய்கைக்குரிய பருவ காலத்தின்போது அமைக்கப்படும் தடுப்புவேலிகள் அல்லது மின்சார வேலிகள் பயிர்ச்செய்கையின் பின்பு அகற்றப்படுகின்ற போது விளைச்சலுக்குப் புறம்பான இதர அனுகூலங்களை யானைகள் பெற வாய்ப்பு இருக்கின்றது. இதனால் அவை மக்களின் வாழ்விடங்களுக்குள் ஊடறுத்துச் சேதங்களை ஏற்படுத்தாது என்று இதன்போது கருத்துக்கூறப்பட்டது. இதுவரை நாடளாவிய ரீதியில் 4300 கிலோமீற்றருக்கு அதிகமான மின்சார வேலிகள் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தால் அமைக்கப்பட்டுள்ளதாகவும் மிகுதி இனம் காணப்பட வேண்டிய அல்லது அடையாளம் காணப்பட வேண்டிய பிரதேசங்கள் தொடர்பில் விரைவாக ஆராய வேண்டும் எனவும் கருத்துரைக்கப்பட்டது.

இதன்போது பிரதேச செயலகங்களில் இருந்து விசேட குழுவை அமைத்து நிலைமைகளை ஆய்வு செய்வதற்கான துரித விஜயங்களை விரைவில் மேற்கொள்வதென்றும் அதன் பின்னர் மாதிரிக் கிராமம் ஒன்றை அமைப்பது தொடர்பாகவும் அதனுடைய வரப்பிரசாதங்களை, பிரதிபலன்களை அனுபவ ரீதியாக அறிந்து கொண்டபின் இதர பிரதேசங்களில் அமைக்கப்பட வேண்டிய மாதிரிக்கிராமங்களின் முன்மாதிரி மற்றும் திட்ட வரைபுகளை வரைந்து அதற்கான நிதி ஏற்பாடுகளை செய்வது தொடர்பிலும் இக்கலந்துரையாடலின்போது ஆலோசிக்கப்பட்டது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இதயவாசல்!

ஒரு பெரியவர்! அவர் ஒரு ஏழை. அதனால் ஒரு குடிசையில் வாழ்ந்தார்.ஒரு நாள் இரவு நல்ல மழை பெய்தது.

அந்தப் பெரியவரும் அவர் மனைவியும் அந்தக் குடிசைக்குள் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அந்த நேரம் பார்த்து யாரோ திடீரென கதவைத் தட்டுவது போன்ற சத்தம் கேட்டது.

அந்தப் பெரியவர் முழித்தார். மனைவியை எழுப்பினார்.

"வெளியே யாரோ வழிப்போக்கர். நமக்குத் தெரியாத நண்பர் வந்துள்ளார் போல இருக்கிறது கதவைத்திற" என்றார்.

அதற்கு அந்த அம்மா... " உள்ளே இடமே இல்லையே! நம் இருவருக்குமே இங்க இடம் போதாதே. இவ்வாறு இருக்கும் போது இன்னும் ஒருவர் எவ்வாறு உள்ளே இருக்க முடியும்?" என்றார்.

அதுக்கு அவர் சொன்னார்.

"இது ஏழையின் குடிசை. இதில் எத்தனை பேர் வந்தாலும் இடமுண்டு!" என்றார். "நான் யதார்த்தமாக பேசுகின்றேன். நீங்கள் தத்துவமாகப் பேசுகின்றீர்களே!"என்றார் அந்த அம்மா.

அதற்கு மறுபடியும் அவர் சொன்னார்... "மனதில் இடம் இருந்தால் இந்தக் குடிசையையே அரண்மனை போல நம்மால் உணர முடியும். உள்ளம் குறுகியிருந்தால் ஒரு பெரிய அரண்மனை கூட சிறியதாகத்தான் தெரியும்.

நம் வீட்டு வாசல் தேடி வந்துள்ள ஒரு மனிதரை எப்படி நாம் போ என சொல்ல முடியும்? இதுவரை இந்தக் குடிசையில் நாம் இரண்டு பேர் படுத்திருந்தோம். இந்த இடத்தில் நிச்சயமாக மூன்று பேர் படுக்க முடியாது. ஆனால் குறைந்தது மூன்று பேர் உட்காரலாம்! அதனால் நாம் எல்லோரும் உட்கார்ந்தால் இன்னும் ஒரு ஆளுக்கு இங்கு இடம் கிடைக்கும்!"என்றார்.

அந்த அம்மா கதவைத் திறந்தார். அந்த ஆள் உடல் முழுவதும் நனைந்து போய் நின்று கொண்டிருந்தான்.

கதவைத்திறந்ததும் உள்ளே வந்தான். மூன்று பேரும் உட்கார்ந்து பேச ஆரம்பித்தார்கள்.

சிறிது நேரம் கழித்து இன்னும் இரண்டு பேர் வந்து கதவைத் தட்டினார்கள். உடனே அந்தப் பெரியவர் "வேறு யாரோ வந்துள்ளார்கள் போல இருக்கே: போய் கதவைத் திறவுங்கள்"என்றார்.

சிறிது நேரத்திற்கு முன்பு உள்ளே வந்த ஆசாமி!

"கதவைத்திறப்பதா? இங்கு இடம் இல்லையே!"என்றான்.

சிறிது நேரத்திற்கு முன்பு இவன் வெளியிலே நின்று கொண்டிருந்தபோது இந்தப் பெரியவர் மனதால் தான் நமக்கு உள்ளே இடம் கிடைத்தது என்பதை மறந்து விட்டான். "என்னத்துக்கு? கதவைத் திறக்கணுமா? வேண்டாமே"என்றான்.

"அன்பு தான் உங்களுக்கு இடம் கொடுத்தது. அந்த அன்பு இன்னும் இருக்கிறது. அது உங்களுடன் முடிந்து விடவில்லை. தயவு செய்து கதவைத் திறந்து விடுங்கள்.

நாம் இப்போது சிறிது விலகித்தானே உட்கார்ந்துள்ளோம்.

இனிமேல் சிறிது நெருங்கி உட்காரலாம். சரியாக இருக்கும்!" என்றார் அந்தப் பெரியவர். கதவைத்திறந்தார்கள்.

அந்த இருவரும் உள்ளே வந்தார்கள்.

ஒரு வழியாக சமாளித்து உட்கார்ந்தார்கள். சிறிது நேரம் சென்றது. அப்போது ஒரு கழுதை வந்து தலையாலே கதவை முட்டியது. உடல் முழுவதும் நனைந்து குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது.

இப்போது அந்தப் பெரியவர் கதவு ஓரமாக உட்கார்ந்திருந்த ஆளிடம் "கதவைத் திறவுங்கள். யாரோ ஒரு புது நண்பர் வந்திருக்கார்!"என்றார். அந்த ஆள் வெளியே எட்டிப் பார்த்து விட்டு "இது கழுதை.அதுக்காக நாம் திறந்துவிட வேண்டியது இல்லை" என்றான். "இங்கே மிருகங்களைக் கூட மனிதர்களாக நடத்தித்தான் எனக்குப் பழக்கம். தயவு செய்து திறந்து விடுங்கள்"என்றார்.

"இடம் எங்கே இருக்கிறது?" என்று கத்தினார்கள் எல்லோரும். அதுக்கு அவர் சொன்னார்.

"இங்கே நிறைய இடம் இருக்கிறது. உட்காருவதற்குப் பதிலாக நாம் எல்லோரும் எழுந்து நிற்கலாம். கவலைப்படாதீர்கள். அவ்வாறு தேவைப்பட்டால் நான் வெளியில் இருக்கிறேன்" என்றார்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?"என்றார் திருவள்ளுவர். அது இதுதான்.

வாழ்க்கையில் அமைதியான நேரம் எது தெரியுமா?

எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமல் அன்பு செலுத்தும் நேரம் இருக்குப் பாருங்கள். அதைவிட அமைதியான நேரம் வேறு எதுவுமில்லை என்கிறார் ஒரு பெரியவர்.(ஓஷோ)

நம் ஆள் ஒருவன்:

"எங்கள் வீட்டுக்கு அடிக்கடி விருந்தினர் வருவது உண்டு சேர். எவ்வளவு விருந்தாளி வந்தாலும் கதவைத் திறந்துவிட்டு மரியாதையாக நான் வெளியில் சென்றுவிடுவேன் சேர்"என்றான்.

"ஏன் அப்படி செய்கிறாய்?"என்று கேட்டேன். "நான் வீட்டுக்குள் இருந்தால் அவர்களுக்கெல்லாம் சாப்பாடு வேறு போட வேண்டியிருக்குமே. அதனால் வெளியில் செல்கிறேன்!"என்றான்.

# அரசாங்கம் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்

# மக்களின் பாதுகாப்பிற்கு முக்கியமளித்து தேர்தலை நடத்துக

## தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

முழு உலகையும் அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் இலங்கையையும் விட்டு வைக்கவில்லை. அரசாங்கம் நாட்டு மக்களின் மீது அக்கறை கொண்டு பல்வேறு நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது. அதே நேரத்தில் தேர்தலை மட்டும் முன்னர் அறிவித்த நேரத்தில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. தற்போதைய் ஆபத்தான சூழல் நாடு தேர்தலுக்கு முகம் கொடுப்பதற்குப் பொருத்தமானதல்ல. எனவே அரசாங்கமும் தேர்தல்கள் ஆணைக்குழுவும் தமது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி வேண்டுகோள் விடுத்தது.

இது குறித்து அந்தக் கட்சி விடுத்த அறிக்கையில்,

கொரோனா வைரஸ் என்ற தொற்று நோயானது இலங்கை உட்பட உலகையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றது. இலங்கை அரசாங்கத்தின் தகவல்களின்படி ஆயிரக்கணக்கானோர் தடுத்து வைக்கப்பட்டு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதுடன், 20 இற்கும் அதிகமானோர் இந்நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து வருவோர் மிக நீண்ட தூரங்களில் உள்ள பரிசோதனை முகாம்களில் வைத்துக் கண்காணிக்கப்படுகின்றனர். தொற்றுநோய் பரவாமல் இருக்க பல்வேறுபட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. பாடசாலைகள், முன்பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் அனைத்தும் மூடப்பட்டன.

அதேபோல் திரையரங்குகள், பூங்காக்கள், மிருகக்காட்சி சாலைகளும் ஏனைய பொழுதுபோக்கு நிலையங்களும் பூட்டப்பட்டன. அனைத்து மத வழிபாட்டுத்தலங்களிலும் மக்கள் கூடுவதைத் தவிர்க்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. வீடுகளிலிருந்து மத அனுஷ்டானங்களை மேற்கொள்ளும்படி மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். நேற்றுத் திங்கட்கிழமை பொது விடுமுறைதினமாக அறிவிக்கப்பட்டது. தேவையேற்பட்டால் இந்த விடுமுறை மேலும் நீடிக்கப்படும் என்று பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் விசேட வர்த்தமானி மூலம் தெரிவிக்கப்பட்டது.

கூட்டங்கள் கூடுவதற்கு இரண்டு வாரங்களுக்கு தடை விதிக்கப்பட்டது. இயன்றவரை மக்கள் வீடுகளில் முடங்கிக்கிடக்குமாறு அரச நிர்வாகத்தால் கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. இவ்வாறான நடவடிக்கைகளால் அச்சமுற்ற மக்கள், தமக்குத் தேவையான உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களை மிக அதிகளவில் கொள்வனவு செய்வதன் மூலம் பல கடைகளும் பொருட்களின்றி வெறிச்சோடிக்கிடக்கின்றன. மக்களும் இந்த எதிர்பாராத செலவின் காரணமாக பொருளாதார ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான அச்ச சூழ்நிலை இருந்த போதும்கூட, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சார்க் நாட்டு தலைவர்களுடனான காணொலி கலந்துரையாடலில் இலங்கையில் திட்டமிட்டபடி ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்று கூறியுள்ளார்.

கொரோனா வைரஸ் உலக நாடுகளில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிர்களைக் காவுகொண்டுள்ளது. இலட்சக்கணக்கான மக்கள் இந்த நோயின் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். உலக நாடுகள் அனைத்தும் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. விமான சேவைகள் நிறுத்தப்படுகின்றன. விமான நிலையங்கள் மூடப்படுகின்றன. போக்குவரத்து மட்டுப்படுத்தப்படுகின்றது. இலங்கை அரசாங்கமும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கொள்ளை நோய் போன்று உருவாகியிருக்கக்கூடிய இந்த கொரோனா வைரஸ் எனப்படும் தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வரவேற்கத்தக்கது. ஆனால், இவ்வாறான மோசமான சூழ்நிலைக்குள் தேர்தல் நடத்த முடியுமென்று ஜனாதிபதி எவ்வாறு உத்தரவாதமளிக்கின்றார் என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் உள்ளது.

கூட்டம் கூட முடியாது. மக்களுடன் பேச முடியாது. சுவரொட்டிகள் ஒட்ட முடியாது. ஒலிபெருக்கிகள் பாவிக்க-முடியாது. இவ்வாறான கட்டுப்பாடுகள் மத்தியிலும் இத்தகைய மோசமான சூழ்நிலையிலும் எந்தவொரு பகுத்தறிவு உள்ள அதிகாரியோ அரசியல்வாதியோ தேர்தலை நடத்தும்படி வற்புறுத்த மாட்டார்கள். ஒரு நீதியான, நியாயமான தேர்தல் நடைபெற வேண்டுமாக இருந்தால், அரசியல் கட்சிகளோ சுயேட்சைக் குழுக்களோ மக்களுடன் தங்களது கொள்கைகளை, கருத்துக்களை கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். அதற்கான தகுந்த சந்தர்ப்பம் இதுவல்ல என்பதை அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்வர்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், கொரோனா வைரஸின் தாக்கம் என்பது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு ஒரு சாதாரண சூழல் ஏற்படும்வரை இந்தத் தேர்தலை ஒத்திவைப்பதே புத்திசாலித்தனமானது. இதனை ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை, தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட அனைவரும் சீர்தூக்கிப் பார்க்கும்படி பொறுப்புள்ள அரசியல் கட்சி என்ற வகையில் வேண்டுகோள் விடுக்கின்றோம் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூட்டணி சார்பில் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## மக்களின் பாதுகாப்பை உடன் உறுதிசெய்க

# பொதுத்தேர்தலை பிற்போடுமாறு தமிழ்க் கூட்டமைப்பு கோரிக்கை



(கொழும்பு)


நாட்டிலே தற்போது நிலவுகின்ற கொரோனா வைரஸ் பரவுகின்ற அபாயம் சம்பந்தமாக அரசாங்கம் உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் உடனடியாக எடுக்க வேண்டும்.

மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்தது. இவ்விடயத்தில் முற்று முழுதாக எமது பங்களிப்பினை வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

மக்களுடைய பாதுகாப்பிற்கு அதியுச்ச கரிசனை வழங்கப்பட வேண்டும் என்பதாலும் இவ் அசாதாரண சூழ்நிலையில் ஜனநாயக நடவடிக்க்கைகளை முழுமையாக செயற்படுத்த முடியாத காரணத்தாலும் ஏப்ரல் 25 ஆம் திகதி நடைபெற இருக்கின்ற பொதுத்தேர்தலைப் பிற்போடுமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம் என அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களின் கலந்துரையாடலின் பின்னர் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-7)

# தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி வடமராட்சியில் மக்கள் சந்திப்பு





(குப்பிழான்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் பொதுத் தேர்தலையொட்டிய மக்கள் சந்திப்பு வடமராட்சி கிழக்கு கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகப் பொதுமண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த மக்கள் சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், கட்சியின் சட்ட ஆலோசகர் கனகரத்தினம் சுகாஸ், யாழ்.மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன், வடமராட்சி கிழக்கு அமைப்பாளர் எஸ். முரளிதரன் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த மக்கள் சந்திப்பில் சமகால அரசியல் நிலைமைகள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாடுகள், எதிர்காலச் செயற்பாடுகள், தமிழ் மக்களின் அபிவிருத்தித் திட்டங்கள், தமிழர் நிலங்களில் திட்டமிட்டு இடம்பெறும் சிங்களக் குடியேற்றம், பௌத்த விகாரைகள் அமைப்பது போன்ற பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (இ-18)

# தேர்தல் தொடர்பான தீர்மானம் தேர்தல்கள் ஆணைக்குழுவிடமே

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவி வருவதால் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பிரசாரங்கள் ஊடாகத் தமது நிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்த முடியாத நிலையேற்பட்டிருப்பதுடன், யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று மக்கள் தெளிவாக சிந்திக்க முடியாத சூழ்நிலையொன்றும் ஏற்பட்டிருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

எனவே பொதுத்தேர்தலை நடத்துவது குறித்த இறுதித் தீர்மானத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொள்ள வேண்டும் என்றும் அதுகுறித்து தேர்தல்கள் ஆணையாளருடன் கலந்துரையாடுவதற்கு தாம் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

பெலவத்தை பத்தரமுல்லையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஜ)

# இலங்கை அரசியலமைப்பும் 19 வது திருத்தம் சம்பந்தமான விமர்சனங்களும்

04

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**இலங்கையின் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பில் எல்லாமாக 24 அத்தியாயங்கள் உள்ளன. இவ் அத்தியாயங்களை விட VII அ, XIVஅ, XVஅ, XVII அ, XVIII அ, XIX அ, XIX ஆ ஆகிய 7 அத்தியாயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.**

**இலங்கையின் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பின் சட்டத் திருத்தங்கள் (1முதல் 19வரை)**

நமது நாட்டின் அரசியல் யாப்பு 1978 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை 19 சட்டத்திருத்தங்கள் செய்யப்பட்ட நிலையில் இருக்கின்றது. 40 வருடங்களுக்குள் இவ்வளவு அதிகமான திருத்தங்களுக்குள்ளாகியது அதன் குறுகிய கால நோக்கங்களையே சுட்டிக் காட்டுகிறது என்று சொல்லலாம். ஒரு தூரதரிசனத்தோடு மக்கள் எல்லோருடைய நல்வாழ்வுக்காக இது செய்யப்பட்டிருப்பின் இவ்வளவு திருத்தங்கள் இவ்வளவு வேகமாக ஏற்படுத்தவேண்டிய தேவை இருந்திருக்காது என்று கூறப்படுகிறது. இதில் 1 தொடக்கம் 16 வரையான திருத்தங்கள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனா காலத்திலும், 17 ஆவது திருத்தம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க காலத்திலும், 18 ஆவது திருத்தம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காலத்திலும், 19 ஆவது திருத்தம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காலத்திலும் கொண்டு வரப்பட்டன. தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில், இச்சட்டத் திருத்தங்களில் முக்கியமானவை ஐந்து எனக் கூறலாம். அவையாவன 6 ஆம் திருத்தச் சட்டம், 13 ஆவது திருத்தச் சட்டம், 17 ஆவது திருத்தச்சட்டம், 18 ஆவது திருத்தச்சட்டம் மற்றும் 19 ஆவது திருத்தச்சட்டம் என்பனவாகும்.

**அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள்**

**1 ஆம் திருத்தம் - சான்றுப்படுத்தப்பட்டது - 1978/11/20**

சில வழக்குகள் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்ட நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படும் எனவும் மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் அல்ல எனவும் ஏற்பாடு செய்வதற்காக உறுப்புரை 140 இற்கான திருத்தம். சுருங்கச் சொல்லின் இது உயர்நீதிமன்ற அதிகாரம் சம்பந்தமானதாகும்.

**2 ஆம் திருத்தம் - சான்றுப்படுத்தப்பட்டது - 1979/02/26**

பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவி விலகல், வெளியேற்றம் அல்லது வேறுவிதமான பதவி துறப்புகள் தொடர்பான நடவடிக்கை முறைகள் பற்றி நடவடிக்கை மேற்கொள்ளும் உறுப்புரை 161 இன் பந்தி (ஈ) இல் உபபிரிவு (ii)ஐ சேர்த்தல். சுருங்கச் சொல்லின் இது பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி மாற்றம் மற்றும் ஆசன இடைவெளி பூரணப்படுத்தல் சம்பந்தமானதாகும்.

**3 ஆம் திருத்தம் - சான்றுப்படுத்தப்பட்டது - 1982/08/27**

தனது முதலாவது பதவிக் காலத்தின் நான்கு வருடங்கள் முடிவடைந்ததன் பின்னர் மேலும் ஒரு காலப் பகுதிக்கு பதவி வகிப்பதற்கு ஆணை ஒன்றை வழங்குமாறு மக்களைக் கோரும் தனது நோக்கத்தை எந்தவொரு நேரத்திலும் ஜனாதிபதி பிரகடனப்படுத்துவதற்கு வகை செய்வதற்காக உறுப்புரை 31 இன் பந்தி (4)ஐ நீக்கி பந்தி (3அ)வை உட்புகுத்துதல். தனது பதவிக்காலம் ஆரம்பித்து இரண்டு வார காலத்தினுள் கடமையைப் பொறுப்பேற்பதற்கு ஜனாதிபதி வேண்டுமென்றே தவறினால், ஜனாதிபதிப் பதவி வறிதாதல் வேண்டும் என ஏற்பாடு செய்யும் உறுப்புரை 38 இன் திருத்தம். ஜனாதிபதிப் பதவியை வகித்தல் பற்றிய உறுப்புரை 160 இன் திருத்தம். சுருங்கச் சொல்லின் இது ஜனாதிபதி பதவி காலநீடிப்பு சம்பந்தமானதாகும்.

**4 ஆம் திருத்தம் - சான்றுப்படுத்தப்பட்டது - 1982 /12/23**

முதலாவது பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை மேலுமொரு ஆறு வருடங்களுக்கு அதாவது 1989 ஓகஸ்ட் 4 ஆம் திகதி வரை நீடிப்பதற்காக உறுப்புரை 161 இன் திருத்தம். சுருங்கச் சொல்லின் இது முதலாம் பாராளுமன்ற பதவிகால நீடிப்பு சம்பந்தமானதாகும்.

**5 ஆம் திருத்தம் -சான்றுப்படுத்தப்பட்டது - 1983/02/25**

முதலாவது பாராளுமன்றத்தில் ஏற்படும் வெற்றிடம் ஒன்றுக்கு உறுப்பினர் ஒருவரை நியமனம் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் தவறுவாராயின் இடைத்தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்காக உறுப்புரை 161 இன் திருத்தம். சுருங்கச் சொல்லின் இது ஜனாதிபதியால் ஆசன இடைவெளி பூரணப்படுத்தல்/பதிலீடு செய்தல் சம்பந்தமானதாகும்.

**6 ஆம் திருத்தம் - சான்றுப்படுத்தப்பட்டது - 1983 /08/08**

உறுப்புரை 157 இன் பின்னர் உட்புகுத்தப்பட்ட உறுப்புரை 157அ இற்கு அங்கீகாரமளிப்பதற்காக உறுப்புரை 101 இன் திருத்தம். இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டை மீறுவதற்கெதிரான தடை பற்றிய உறுப்புரை 167அ இன் உட்புகுத்தல். மேற்குறிப்பிடப்பட்ட உறுப்புரை 157அ மற்றும் அரசியலமைப்புடன் சேர்க்கப்பட்டுள்ள ஏழாவது அட்டவணை ஆகியவற்றிற்கு அங்கீகாரமளிக்கும் உறுப்புரை 161 இன் திருத்தம். உறுப்புரை 157அ தொடர்பான பிரகடனத்தையும் உறுதிப் பிரமாணத்தையும் உள்ளடக்குவதற்கான ஏழாவது அட்டவணையின் சேர்க்கை. சுருங்கச் சொல்லின் இது ஆள்புல ஒருமைப்பாட்டுக்கும் இறைமைக்கும் எதிரான செயற்பாடுகளை தடை செய்தல் சம்பந்தமானதாகும்.

6 ஆம் திருத்தச் சட்டம் 1983 ஆம் ஆண்டு தமிழ்

**6 ஆம் திருத்தச்சட்டம் 1983ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கெதிரான மிக மோசமான கலவரங்கள் நடந்ததற்குப் பின்னர் கொண்டு வரப்பட்ட திருத்தமாகும். பிரிவினை வாதத்திற்கு ஆதரவாக அரசியல் கட்சிகள் இருப்பது சட்டத்திற்குப் புறம்பானது என்பதே இதுவாகும். இதன்படி சகல கட்சிகளும் பாராளுமன்றத்தில் அமரும்போது தாம் நாட்டைப் பிரிக்க முயலமாட்டோமென சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளக் கேட்கப்படுவர். இதன் பிரகாரம் தமிழர் ஐக்கிய விடுதலைக்கூட்டணியினர் நாடாளுமன்றத்தின் ஆசனங்களை இழந்தனர்.**

மக்களுக்கெதிரான மிகமோசமான கலவரங்கள் நடந்ததற்குப் பின்னர் கொண்டுவரப்பட்ட திருத்தமாகும். பிரிவினை வாதத்திற்கு ஆதரவாக அரசியல் கட்சிகள் இருப்பது சட்டத்திற்குப் புறம்பானது என்பதே இதுவாகும். இதன்படி சகல கட்சிகளும் பாராளுமன்றத்தில் அமரும் போது தாம் நாட்டைப் பிரிக்க முயலமாட்டோமென சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளக் கேட்கப்படுவர். இதன் பிரகாரம் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினர் நாடாளுமன்றத்தின் ஆசனங்களை இழந்தனர்.

1983 ஓகஸ்ட் மூன்றாம் திகதி அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தத்தை விவாதிப்பதற்காக நாடாளுமன்றம் ஓகஸ்ட் நான்காம் திகதி கூட்டப்படுவதாக ஜே.ஆர் அரசாங்கம் அறிவித்தது.

அவசர மசோதாவாக முன்வைக்கப்பட்ட அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தம் தொடர்பிலான நீதியாய்வுத் தீர்ப்பை வழங்கியிருந்த உயர் நீதிமன்றமானது அதிலிருந்த இரண்டு சரத்துகள் தவிர்த்து ஏனையவை அரசியலமைப்புக்கு இயைபானவை என்று தீர்மானித்திருந்தது. ஆயினும் அரசியலமைப்போடு இயைபற்றவற்றையும் 2/3 பெரும்பான்மையோடு நிறைவேற்றும் பலம் ஜே.ஆர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு இருந்தது.

1983 ஓகஸ்ட் நான்காம் திகதி நாடாளுமன்றம் கூடிய போது பிரதமர் ரணசிங்ஹ பிரேமதாஸவினால் அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தச் சட்டமூலம் அவசர மசோதாவாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அமர்வில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினர் கலந்து கொள்ளவில்லை. இத்திருத்தத்தின் மீதான நாடாளுமன்ற விவாதம் ஏறத்தாழ 13 மணித்தியாலங்களுக்கு நடந்தது.

இந்த நிலையில், நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பேரினவாதத்தின் முகமாக இருந்த அமைச்சர் சிறில் மத்தியூ பெரும்பான்மையின் மேலாதிக்கத்தை நியாயப்படுத்திப் பேசினார். அதற்கு அவர் எடுத்துக் கொண்ட உதாரணம் மலேஷியா. தனது உரையில், "இந்நாட்டின் 70 சதவீதமானவர்கள் சிங்கள மக்களீவர். மலேசியா போன்றதொரு நாட்டில் வெறும் 53 சதவீதம் தான் மலாயர்கள். அந்நாட்டில் வாழ்ந்த சீனர்கள் மேலாதிக்கமாக நடந்து கொண்ட போது மலாயர்கள் வெறும் ஆறு நாட்களுக்கு மட்டுமே பொறுமையாக இருந்தார்கள் (அதாவது மலேஷியாவில் நடந்த 1969 கலவரத்தை பற்றிப் பேசுகிறார்). ஆனால் இந்த நாட்டின் சிங்கள மக்கள் 10 வருடங்களாகப் பொறுமையாக இருந்திருக்கிறார்கள். சிங்களவர்கள், பெரும்பான்மை இனமென்றால், அவர்கள் ஏன் பெரும்பான்மையைப் போல நடந்துகொள்ள முடியாது?" என்று பேரினவாதம் கொப்பளிக்கப் பேசினார்.

ஆனால் ஜே.ஆரின் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த இரண்டு முக்கிய சிறுபான்மை இனத்தவர்களான ஏ.ஸீ.எஸ்.ஹமீட் மற்றும் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகிய இருவரும் ஆறாவது திருத்தத்தின் பாரதூரத்தன்மை பற்றி நாடாளுமன்ற விவாதத்தின் போதான தமது பேச்சில் எடுத்துரைத்தார்கள்.

ஆறாம் திருத்தத்தை அறிமுகப்படுத்துவதானது, நாட்டின் இன முரண்பாடு தொடர்பில் ஆரோக்கியமானதொன்றல்ல என்றே தொண்டமான் கருதினார். இதன் மூலம் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியை அரசியல் அஞ்ஞாதவாசத்துக்குள் தள்ளுவதானது அவர்களைப் பிரிவினையை நோக்கியே மேலும் தள்ளும் என்பதே அவரது எண்ணப்பாடாக இருந்தது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், "நீங்கள் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியைத் தடை செய்தால் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களை நடாளுமன்றத்திலிருந்து வெளியேறச் செய்தால் உங்களுக்கு பேச்சுவார்த்தை நடத்த யாரும் இருக்க மாட்டார்கள். பிறகு, நீங்கள் சிலவேளை இடைத்தரகர்களோடுதான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டி வ்ரும்" என்ற எச்சரிக்கையையும் முன்வைத்தார். அரசமைப்புக்கான ஆறாவது திருத்தத்தை வெளிவிவகார அமைச்சராக

**நாடாளுமன்றத்தில் ஆறாவது திருத்தச் சட்டமூல விவாதத்தின் போது சௌமிய மூர்த்தி தொண்டமான் "நீங்கள் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியைத் தடை செய்தால்அதன்நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறச் செய்தால் உங்களுக்கு பேச்சு வார்த்தை நடத்த யாரும் இருக்க மாட்டார்கள். பிறகு, நீங்கள் சிலவேளை இடைத்தரகர்களோடுதான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டி வரும்" என்ற எச்சரிக்கையை முன்வைத்தார்.**

இருந்த ஏ.ஸீ.எஸ்.ஹமீட்டும் ஆதரிக்கவில்லை. அவரது பார்வை வேறாக இருந்தது. அவர் சர்வதேச உறவுகளின் கண்ணாடி கொண்டு. இதன் விளைவுகளை நோக்கினார். தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியைத் தடைசெய்தால் அது இலங்கையின் இன முரண்பாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிடுவதற்கான ஒரு வாய்ப்பை வழங்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

அவர் சொன்னது போலவேதான் காய்கள் நகரத் தொடங்கின. தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியை ஓரங்கட்டும் ஆறாம் திருத்தத்தின் விளைவாக தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினர் இந்தியாவின் தலையீட்டை வேண்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதுடன் அது இலங்கை அரசியலில் இந்தியா நேரடியாக உள்நுழைவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியது.

ஏறத்தாழ 13 மணிநேர தொடர் விவாதத்துக்குப் பின் 1983 ஓகஸ்ட் ஐந்தாம் திகதி அதிகாலை நான்கு மணியளவில் இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு யாப்புக்கான ஆறாம் திருத்தம் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (நன்றி-யாழ் இணையம்)

**நாடாளுமன்றத்தில் விவாதத்தின் போது அரசமைப்புக்கான ஆறாவது திருத்தத்தை வெளிவிவகார அமைச்சராக இருந்த ஏ.ஸீ. எஸ்.ஹமீட்டும் ஆதரிக்கவில்லை. தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியைத் தடை செய்தால் அது இலங்கையின் இன முரண்பாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிடுவதற்கான ஒரு வாய்ப்பை வழங்கும் என்று அவர் குறிப்பிட்டார்.**

(தொடரும்....)


# கொரோனா அச்சம் நாளுக்கு நாள் அதிகரிப்பு

# வீட்டை விட்டு வெளியில் செல்ல வேண்டாம்!

## டுவிட்டரில் தமிழில் பதிவிட்டு ஜனாதிபதி அறிவுரை

**(கொழும்பு)**

**இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக நேற்று அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்டது.இந்நிலையில், நேற்று திங் கட்கிழமை டுவிட்டரில் தமிழில் பதிவிட்ட ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ, வீட்டை விட்டு வெளியில் செல்ல வேண்டாம் எனப் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.**



தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கிலேயே அவர் மேற்கண்டவாறு பதிவிட்டார்.

குறித்த பதிவில் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், "இன்று (நேற்று) விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டது. தயவு செய்து வீட்டிலேயே இருங்கள். பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தவோ, பொது இடங்களில் கூடவோ வேண்டாம். கட்டாயத் தேவைக்கு ஒருவர் மட்டும் வெளியே சென்று, வீட்டிற்குள் நுழைவதற்கு முன் கைகளைச் சுத்தமாகக் கழுவுங்கள். உங்களையும் ஏனையோரையும் பாதுகாக்கவும்" எனப்பதிவிட்டார். (இ-7)

# சீனப் பிரஜைகளுக்கு தற்காலிக பயணத்தடை விதிக்க வேண்டும்

## ராஜகருணா வலியுறுத்து



(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த வேண்டுமாயின் சீனப் பிரஜைகளுக்கு தற்காலிகப் பயணத்தடை விதிக்கப்பட வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தாக்கம் நாட்டில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளமை தொடர்பாக கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக ஹர்ஷன ராஜகருணா மேலும் தெரிவிக்கையில், "கொரோனா வைரஸை தடுப்பதற்கு விமான நிலையங்களில் தீவிர சோதனை நடவடிக்கை முன்னெடுப்பதைப் போன்று சீனப்பிரஜைகளுக்கும் தற்காலிகத் தடை விதிக்க வேண்டும்.

அப்போதுதான் கொரோனா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியும். மேலும் கொரோனா வைரஸால் சீனாவில் அதிகளவான உயிரிழப்புக்கள் பதிவு செய்யப்பட்டன.

இந்நிலையில் சீனப்பிரஜைகள் எவ்வித தடங்கலுமின்றி நாட்டிற்கு வந்து செல்கின்றனர். ஆனால், ஏனைய நாடுகள் இதற்கு தடை விதித்துள்ளன. இதனால் இலங்கையிலும் சீனப் பிரஜைகளுக்கு தற்காலிக பயணத் தடை விதிக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாரம்பரிய மூலிகைகளையும் ஒளடதங்களையும் வாங்கி உபயோகிப்பதில் மக்கள் ஆர்வம்

(ஏறாவூர்)

கொரோனா வைரஸ் அச்சத்திலிருந்து தங்களுக்கு முற்பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்காக பாரம்பரிய ஆயுள்வேத மூலிகைகளையும் ஒளடதங்களையும் தேடிப் பெற்றுக் கொள்வதில் மக்கள் ஆர்வம் காட்டுவதாக ஆயுள்வேத மூலிகை மருந்து விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

இதனால் பெருங்காயம், மஞ்சள், கருஞ்சீரகம், கருஞ்சீரக எண்ணெய் உள்ளிட்ட இத்தியாதி ஆயுள்வேத மூலிகைகள் அதிகளவில் விற்பனையாவதாகவும் சில இடங்களில் இப்படிப்பட்ட மூலிகைப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இரசாயனம் கலக்காத வகையில் இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி தானிய உணவு வகைகளைப் பெற்று நுகர்வதிலும் மக்கள் ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இரசாயனங்கள் கலக்காது இயற்கையாக உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி தானிய உற்பத்திப் பொருட்களுக்கு அதிக கேள்வி நிகழ்வதாக நுகர்வோர் தெரிவித்தனர். (இ-7)

# சீனாவுக்கு வெளியே கொரோனா தொற்று ஈரானில் உயிரிழப்பு 724 ஆக உயர்வு



(டெஹ்ரான்)

சீனாவுக்கு வெளியே மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ள ஈரானில், கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 724 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டும் ஒரேநாளில் 113 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சகம் தெரிவிக்கிறது.

உயிரிழந்தவர்களில் 15 சதவீதம் பேர் 40 வயதிற்குட்பட்டவர்கள் என்று சுகாதார அமைச்சகத்தின் மருத்துவ அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

அத்துடன், ஈரானில்கொரோனா வைரஸ் பாதிப்புக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 14 ஆயிரம் ஆக அதிகரித்துள்ளது.

மத்திய கிழக்கில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் ஒன்றாக ஈரான் உள்ளது. ஈரானும் வைரஸ் தொற்றினை கட்டுப்படுத்த கடுமையான சுகாதார நடிவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதும், அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளால் நோய்க்கு எதிரான போராட்டம் தடைப்பட்டு வருவதாக ஈரானின் ஜனாதிபதி கூறுகிறார். மக்கள் தங்கள் பயணங்களை இரத்துச் செய்து வீட்டில் இருக்க வேண்டும் என ஈரான் அரசின் சுகாதாரத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (ஜ-2)

# வேகமாகப் பரவும் கொரோனா கர்ப்பிணிகளுக்கு முக்கிய அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றை கருத்திற்கொண்டு, கர்ப்பிணித் தாய்மாருக்கான மாதாந்த பரிசோதனை நடவடிக்கைகளுக்கு வரையறை விதிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்தது. அதற்கமைய 8 மாதங்கள் பூர்த்தியான கர்ப்பிணித் தாய்மார்கள் மாத்திரம் பரிசோதனைகளுக்காக வருகை தருமாறும் ஏனையோர் தேவை ஏற்படும் பட்சத்தில் மாத்திரம் வருகை தருமாறும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அதேவேளை, 8 மாதங்கள் பூர்த்தியாகாத கர்ப்பிணித்தாய்மார்களின் வீடுகளுக்குச் சென்று சுகாதார அதிகாரிகள் பரிசோதனைகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு குழந்தைகளுக்கு ஏற்றப்படும் ஊசியை ஏற்றாதிருக்கவும் தீர்மானிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (இ-7)




Me: அண்ணே உங்க கடையில Hand wash இருக்கா?

கடைக்காரர்: இருக்கு தம்பி லைபோய்யா இல்ல டெட்டோலா

Me: அத போட்டு நல்லா கையை கழுவிட்டு பத்து ருவாக்கு முறுக்கு தாங்க.

இஞ்சி, பூண்டு, மிளகு இதெல்லாம் அதிகமா சாப்பிட்டா கொரோனா வுக்கு நல்லது....



நாம எதுக்கு டாக்டர் கொரோனா வுக்கு நல்லது பண்ணனும்?







## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2005

தர்சா





லது




பகி




கஜி



உன் மனம் உடைக்கப்படும் ஒவ்வொரு தருணமும் நீ உருவாக்கப்படுகிறாய்... அதானால் வலிகளுக்கு நன்றி கூறிப் பழகிக்கொள்... புன்னகையுடன் ஏற்றுக்கொள்

விஸ்னு



பல சமயங்களில் மனம் இறுக்கமான நிலையில் இருக்கும்பொழுது இதுவும் கடந்து போகும் என்பதே மிகப் பெரிய சமாதானம்


நிசா



இல்லாத ஒன்றில்தான் நிம்மதி இருப்பதாய் நினைத்து தேடிக் கொண்டேயிருக்கிறது மனிதர்களின் மனம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிகிச்சை பெற மறுப்பது; நோயைப் பரப்புவது சட்டப்படி கடும் குற்றம்



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள், நோய் அறிகுறிகளுடன் காணப்படுபவர்கள் மற்றும் நோய் தொற்றுக்கு உள்ளாகி நோயை பரப்ப முற்படுவது தொடர்பிலான தகவல்களைத் திரட்ட பொலிஸ் த்தலைமையகத்தில் விசேட வழிநடத்தல் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவலைத் தடுப்ப தற்காக பொலிஸாருக்கு கிடைக் கும் தகவல்கள் அனைத்தும் இந் தப் பிரிவின் ஊடாகவே வழி நடத்தப்படும் என்பதுடன், தகவல்களை வழங்க ஐந்து விசேட தொலைபேசி இலக்கங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் சிகிச்சை பெற மறுப்பது, நோய் அறிகுறி களுடன் மக்கள் மத்தியில் நடமாடல் அல்லது நோய் தொற்றுக்குள்ளான வர்கள் ஏனையவர்களுக்கு நோயைப் பரப்புவது என்பன சட்டப்படி குற்றமாகும்.

நாட்டிலுள்ள அனைத்துப்பொலிஸ் நிலையங்களிலும் ஏழு பேர்கொண்ட விசேட குழுவொன்று இதற்காக ஸ்தாபிக்கப்பட்டுடன், பிரதேச சுகாதார பரிசோதகரின் உதவியுடன் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் சந்தேகிக்கப்படுவர்களுக்கான சுகாதார நடவடிக்கைகளை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இவர்களுக்கு எதிராக ஆறு மாதம் அல்லது இரண்டு வருட சிறைத் தண்டனையை வழங்கவும் முடியுமென பொலிஸ் தலைமையகம் அறிவித்தது.

கொழும்பில் அமைந்துள்ள பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சட்டம் மற்றும் ஒழுக்காற்று பிரிவுகளுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண மேற் கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# தட்டுப்பாடின்றி மருந்து வகைகளைப் பேண சுகாதார அமைச்சு விசேட நடவடிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக தட்டுப்பாடின்றி மருந்து வகைகள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் வைத்திய உபகரணங்களை மொத்தமாக வைத்திருக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க, கட்டுப்படுத்த மற்றும் சிகிச்சைக்குத் தேவையான மருந்துகள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் வைத்திய உபகரணங்களைத் தட்டுப்பாடின்றி வைத்திருக்க தேவையான திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. அதற்காக சுகாதார மற்றும் தேசிய வைத்திய சேவைகள், பெண்கள் மற்றும் சிறுவர் நடவடிக்கைகள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் அண்மையில் கலந்துரையாடலொன்று சுகாதார அமைச்சில் நடைபெற்றது.

அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபன அதிகாரிகள் மற்றும் வைத்திய பணிப்பாளர்களும் இக்கலந்துரையாடலில் பங்குகொண்டனர்.

விசேடமாக இங்கு கொரோனா வைரஸ் நோயை தடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் சிகிச்சைக்கு தேவையான மருந்துகள் மற்றும் வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு வைத்திய உபகரணங்கள், முகக் கவசங்கள், கையுறைகள் மொத்தமாக வைத்திருப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.



அதற்காக அரச மருந்தக கூட்டுத்தாபனம் மற்றும் வைத்திய வழங்கல் பிரிவுக்கு தேவையான நிதியை விரைவில் வழங்கவும், உடனடியாக விலைக்கு வாங்குவதற்கு தேவையான அனுமதியை வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

அதன் பிரகாரம் எதிர்வரும் இரண்டு நாட்களும் அவற்றை விலைக்கு வாங்கி தேவைக்கேற்ப அவற்றை வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் ஆலோசனை வழங்கினார். (இ-7)

# கொரோனா வைரஸ் அச்சத்தால் வெறிச்சோடிய பொதுப் போக்குவரத்து

(ஏறாவூர்)

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக தூர இடப் பயணங்களையும் அத்தியாவசியமின்றிய பயணங்களையும் மக்கள் முழுதளவு குறைத்துக்கொண்டுள்ளதால் வழமையாக சன நெருசலுடன் பயணிக்கும் புகையிரதங்கள், பொதுப் போக்குவரத்து பேருந்துகள் தற்போது ஒரு சில பயணிகளோடு பயணிக்கின்றன.

இதேவேளை மட்டக்களப்பு புகையிரத சேவை பயணிகளின்றி வெறிச்சோடியுள்ளது. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட இரவு நேர விரைவு புகையிரதம் ஏறாவூரைக் கடக்கும்போது சுமார் 50 பயணிகளே புகையிரதத்தில் பயணம் செய்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

புகையிரதத்தில் குளிரூட்டப்பட்ட ஆசனங்களுக்கான முற்கூட்டிய பதிவுகளை எவரும் மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கும் புகையிரத அதிகாரிகள் சொகுசு உறங்கலிருக்கைகள், மற்றுமுள்ள ஆசன முற்பதிவுகளுக்கும் பயணிகள் ஆர்வம் காட்டவில்லை என்றும் தெரிவித்தனர்.

தூரப் பயணங்களை வழமையான புகையிரதப் பயணிகள் தவிர்த்து வருவதாகவும் இடைப்பட்ட குறுந்தூரப் பயணங்களை ஒரு சில பயணிகளே மேற்கொள்வதாகவும் புகையிரத நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

## செய்தித்துளிகள்

### தேசிய அடையாள அட்டைக்கான ஒரு நாள் சேவை இடைநிறுத்தம்

(கொழும்பு)

மறு அறிவித்தல் வரும் வரை தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான ஒருநாள் சேவை இன்று முதல் இடைநிறுப்பட்டது.

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-7)

### மூதூரில் விபத்து மூவர் படுகாயம்

(மூதூர்)

மூதூரில் டிப்பர் ரக வாகனமும் ஆட்டோவும் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்தனர்.

திருகோணமலை, சேருவில - மூதூர் பிரதான வீதியில் நேற்று அதிகாலை நடைபெற்ற இவ்விபத்தில் ஆட்டோவில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கந்தளாயில் இருந்து சேருநுவர பகுதிக்கு சென்ற ஆட்டோவும் மணல் ஏற்றுவதற்காக சென்ற டிப்பர் வாகனமுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக சூரியபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து ஏற்படுத்தியதாக கூறப்படும் டிப்பர் வாகனத்தின் சாரதியை பொலிஸார் தடுத்து வைத்துள்ளதோடு, விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சூரியபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

### கொரோனா தொற்று சந்தேகத்தில் மேலும் ஒருவர் வைத்தியசாலையில்

(ஏறாவூர்)

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேலும் ஒருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளாரென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

லண்டனில் இருந்து மட்டக்களப்புக்கு வந்து தங்கியிருந்தவரே இவ்வாறு சந்தேகத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவர் மட்டக்களப்பு நகரில் தங்கியிருந்த நிலையில், நேற்றுத் திங்கட்கிழமை சுகவீனம் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் கொரோனா சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

இதேவேளை நேற்று முன்தினம் கொரோனாவினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவருக்கு கொரோனா தொற்று இல்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 120 | 140 |
| தக்காளி | 100 | 100 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 120 | 100 |
| கோவா | 120 | 80 | 90 | 120 |
| கரட் | 160 | 200 | 160 | 240 |
| பூசணி | 80 | 80 | 60 | 80 |
| புடோல் | 80 | 90 | 100 | 100 |
| வாழைக்காய் | 60 | 80 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 200 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | — | 200 | 240 |
| பாகற்காய் | 200 | 120 | 170 | 160 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 100 |
| பயற்றங்காய் | 120 | 80 | 80 | 60 |
| லீக்ஸ் | 140 | 140 | 160 | 200 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 200 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 600 | 500 |
| போஞ்சி | 150 | 120 | 130 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | — | 60 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 200 | 150 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 40-70 |
| இராசவள்ளி | 250 | 200 | 180 | 150 |
| வெங்காயப்பூ | 250 | 100 | 140 | 140 |
| முள்ளங்கி | 40 | 40 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | — | — | — | — |

# சிறுவர் அரங்கம்

## மூடர்களுக்கு முட்டாள் குரு



தஞ்சையை அடுத்த நஞ்சையன்பட்டி என்னும் சிறப்பான ஒரு சிற்றூர் இருந்தது. அவ்வூரில் முட்டாள், மூடன், மட்டி, மடையன், பேயன், என்று ஐந்து பேர்கள் நெருங்கிய நண்பர்கள் இருந்தார்கள். இந்த ஐந்து பேர்களும் கல்வியறிவு என்பது கொஞ்சம் கூட இல்லாதவர்கள் நிழலுக்காகக்கூட பள்ளிக்கூட வாசலில் ஒதுங்காதவர்கள். கல்வி அறிவு இல்லையென்பது கூட பெரிது இல்லாதவர்கள். சுய அறிவும் அற்றவர்கள்.மற்றவர்கள் கூறும் அறிவுரையையும் கேட்க மாட்டார்கள். தாங்கள் செய்வதுதான் சரி என்று கூறுவார்கள். இவர்களுக்கு எந்த வேலையும் தெரியாது. அதுமட்டுமல்லாமல் அவர்கள் எந்த வேலையையும் செய்ய விருப்பமில்லாத சோம்பேறிகள்.

இவர்களது பெயருக்கு ஏற்றாற் போன்றுதான் செய்கின்ற செயல்களும் இருக்கும். பொதுவாக இவர்களுக்கு அறிவும் கிடையாது. உலக அனுபவமும் கிடையாது. வேலை செய்து பிழைக்க வகையும் தெரியாது. இவர்களுக்கு ஒன்றுமே செய்யத் தெரியாது என்பதால் வயிறு சும்மா இருக்குமா?வயிறு பசியினால் வாடும் போதெல்லாம் கைநீட்டி ஏதாவது கேட்டு சாப்பிட முடிந்ததே தவிர வயிறார சாப்பிட முடியாமல் வாடினார்கள்.

எவருடைய வீட்டில் போய் உணவுக் கேட்டால் உடம்பை இப்படி வளர்த்து வைத்திருக்கிறீர்களே? எங்காவது கூலி வேலை செய்து பிழைத்துக் கொள்ள கூடாதா? என ஏளனத்துடன் கூறுவார்கள். ஊரிலுள்ள எல்லோரும் இவர்களை ஏளனமாகவும் கிண்டலாகவும் பேசியதினால் சொந்த ஊரை விட்டு வெளியூருக்கு சென்றால் பிழைத்து கொள்ளலாம் என்று தீர்மானித்து கால்போன படி வெளியூருக்கு சென்று கொண்டிருந்தனர். முட்டாளுக்கு ஒரு யோசனை தோன்றியது.

நாம் ஐந்து பேர்களும் ஒரே இடத்திற்குப் போனால் வேலையும் கிடைக்காது. உணவும் கிடைக்காது. நாம் எல்லோரும் ஒரு குருநாதரைத் தேடி கண்டு பிடித்து சீடர்களாகி விட்டால் நமக்கு எந்த கஷ்டமும் வராது என்றான்.

நண்பர் நால்வருக்கும் ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் மூடன் அதனால் நமக்கு என்ன இலாபம் கிடைக்கும் என்றான்.

நாம் எல்லோரும் ஒரு வீட்டில் போய் உணவு கேட்டால் சோம்பேறி என்பார்கள். ஆனால் நாம் எல்லோரும் ஒரு குரு தேவருடன் சாமியார்கள் போன்று சென்றால் நம் காலில் விழுந்து கும்பிட்டு மரியாதையோடு நடந்து வயிராற உணவும் அளிப்பார்கள் என்றான் முட்டாள்.


இது சரியான யோசனைதான் என்று மட்டி, மடையன், மூடன், பேயன் ஆகிய நான்கு பேர்களும் சந்தோஷமடைந்தனர்.

அயலூரை அடைந்ததும் ஒரு சாமியாரின் மடம் இருந்தது. அது பரமார்த்த குருவின் மடமாகும். அங்கு சென்ற ஐவரும் தங்களின் நிலையைக் கூறி சீடர்களாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டனர்.பரமார்த்த குரு தன்னை நாடி வந்த மூடர்களுக்கு சற்றும் சளைக்காத முட்டாள் குருவாகும்.

தனது முட்டாள்தனம் ஊரிலுள்ளவர்களுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக ஊரின் எல்லையில் குடில் அமைத்து வாழ்ந்து வந்தார்.

இந்த வயதான காலத்தில் தனியாக வீடு வீடாகச் சென்று சாப்பிடுவது முடியாத காரியமாக இருக்கிறது. இவர்களை சீடர்களாக ஏற்றுக் கொண்டால் இவர்களை .அனுப்பிவிட்டால் அவர்கள் கொண்டு வரும் உணவை நிம்மதியாக உண்டு உறங்கி காலத்தைக் கழித்து விடலாம் என்று நினைத்து மூடர்களான ஐந்து சீடர்களுக்கு முட்டாளான வயதான இவர் பரமார்த்த குருவானார்.

## இணைக்குக



## தமிழ் ஒத்தகருத்துச் சொற்கள்

- அபராதம் - தண்டனை
- அபராதி - குற்றவாளி
- அபாண்டம் - பழி
- அபாயம் - ஆபத்து
- அபிராமி - பார்வதி
- அபிலாசை - விருப்பம்
- அபூர்வம் - அருமை
- அப்பு - நீர்
- அமரர் - தேவர்
- அமராவதி - இந்திரனுடைய நகரம்
- அமர் - போர்
- அமலன் - குற்றமற்றவன்

## விடுகதைகளும் விடைகளும்

• காட்டுக்குள்ளே நெல் விதைத்தேன். காக்கையும் தின்னவில்லை. குருவியும் தின்னவில்லை.

**உப்பு**

• உயிர் இல்லாப் பறவை, ஊர் விட்டு ஊர் செல்லும்.

**கடிதம்**

• இத்தனூண்டு பிள்ளைக்குக் குத்தினாப் போல் நாமம்.

**உளுந்து**

• வாயைத் திறந்தால் முத்து உதிரும்.

**மாதுளம் பழம்**

• காய்த்தும் பழுக்காத மரம் என்ன மரம்?

**இலவ மரம்**

• வெள்ளைக் கத்திரிக்காய், கள்ளக் கூச்சல் போடுது.

**சங்கு**

• வெள்ளை நிறத்துக் கள்ளச் சாமியார். கரையில் நின்று கடுந்தவம் செய்கிறார்.

**கொக்கு**

• தான் இருந்தால் பிறரை இருக்கவிடமாட்டான் அவன் யார்?

**ஓட்டை**

• ஒரு ஊருக்கு ஐந்து வழி.

**உள்ளங்கை**

• அண்ணன் தம்பி இருவர். தம்பி ஒரு சுற்றுச் சுற்றினால் அண்ணன் பன்னிரண்டு சுற்றுச் சுற்றுவான்.

**கடிகார முட்கள்**

## உணவுப் பொருட்களைப் பாதுகாத்தல்

உணவுப் பொருட்கள் நுண்ணங்கிகளால் இலகுவிற் பழுதடையக் கூடியன.

இவ்வாறு பழுதடையாமல் நீண்டகாலம் பாதுகாத்து வைப்பதற்காகப் பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன. இவ்வாறு செய்து வைக்கும் போது இவை இலகுவிற் பழுதடையமாட்டாது.

**உணவுப் பொருட்களைப் பேணும் முறை**

- மீன்கள்:- உப்பிட்டு வெயிலிற் காய வைத்துக் கருவாடு ஆக்குதல்.
- தேன்:- மிளகு இட்டு வைத்தல்.
- பனங்கிழங்கு:- வெயிலிற் காயவைத்து ஒடியல் ஆக்குதல்.
- தேசிக்காய்:- உப்பு, புளி சேர்த்து ஊறுகாய் ஆக்குதல்.
- கத்தரி, பாகற்காய், மாங்காய்:- சிறுதுண்டுகளாக்கி வெயிலிற் காய வைத்து வற்றல் ஆக்குதல்.
- மாம்பழம்:- காய்ச்சிப் பழப்பாகு ஆக்குதல்.

**பழுதடையும் பொருட்களின் அறிகுறிகள்**

வீடுகளில் நாம் அன்றாடம் பாவிக்கும் சில உணவுப் பொருட்கள் நுண்ணங்கிகளால் பழுதடைகின்றன. இவ்வாறு பழுதடைந்திருக்கும் போது அவற்றின் தோற்றத்தில் முக்கிய அறிகுறிகள் தென்படும்.

உணவுப் பொருட்கள் பழுதடைந்த அறிகுறி

- பால்:- திரைந்திருக்கும்
- கத்தரிக்காய்:- அழுகியிருக்கும்
- மீன்கள்:- பூக்கள் நிறம் வெளிறிக் காணப்படும், துர்நாற்றம் வீசும்.
- பாண்:- பூஞ்சணம் படர்ந்திருக்கும்.
- மாம்பழம்:- தோல் கறுத்திருக்கும், தோல் வலுவிழந்திருக்கும்.

## பொன்மொழி

காற்றாடி காற்றை எதிர்த்தே உயரச் செல்கிறது; காற்றுடன் அல்ல

-வின்ஸ்டன் சர்ச்சில்

## தெரிந்து கொள்வோம்:-

வீட்டுத்தோட்டப் பயிருக்கு இடக்கூடிய சேதன வளமாக்கிகள்:- மாட்டெரு, ஆட்டெரு, கோழியெரு

பயிர்களில் இலைகளுக்குச் சேதம் உண்டாக்கும் பிரதான பீடைகள்

இலையுண்ணும் மயிர்க்கொட்டி, பச்சை மூட்டுப்பூச்சி, இலைத் தத்திகள், வெட்டுக்கிளி, இலைச்சுருட்டிப் புழு, இராணுவப்புழு, இலையுரிபுழு.

புகழ்ச்சி நல்லவனை மேலும் நல்லவனாக்கும் கெட்டவனை மேலும் கெட்டவனாக்கும்.

~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# அம்பை நோவதற்கு முன் எய்துபவரை கவனியுங்கள்

இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறையின் தலைவராக இருந்த வைத்திய கலாநிதி என்.சிவராஜா (அமரர்) கூறிய கதை.

மலை உச்சியில் நிற்கின்ற ஒருவன் அந்த மலையால் பயணிப்பவர்களை தள்ளிவிடுகின்றான்.

தள்ளப்பட்டவர்கள் மலையின் அடிவாரத்திலுள்ள நீர்த்தடாகத்தில் வீழ்கின்றனர்.

அங்கு நிற்பவர்கள் வீழ்பவர்களைத் தூக்கி அவர்களுக்கு சிகிச்சையளிக்கின்றனர்.

உண்மையில் மலை உச்சியில் நின்று தள்ளிவிடுபவனை பிடித்து விட்டால், தண்ணீர்த் தடாகத்தில் வீழ்வதும் அவர்களைத் தூக்கி வந்து சிகிச்சை அளிப்பதும் தவிர்க்கப்படக் கூடியவை.

இங்கு மலையில் நிற்பவனைப் பிடிப்பது நோய்த் தடுப்பு நடவடிக்கை.

தண்ணீரில் வீழ்ந்தவர்களைத் தூக்கிக் காப்பாற்றுவது நோய்ச் சிகிச்சைப் பிரிவு.

ஆக, நோய்த் தடுப்புப் பிரிவு உச்சமாக இயங்குமாயின் சிகிச்சை வழங்குகின்ற மருத்துவமனைக் கட்டமைப்புகளுக்கு அதிக வேலை இருக்காது என்றார்.

இது நோய்த் தடுப்புப் பிரிவின் முக்கியத்துவத்தை விளக்குவதற்காக வைத்திய கலாநிதி என்.சிவராஜா கூறிய உதாரணக்கதை.

இக்கதை இப்போது நிலவுகின்ற கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பில் கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது.

கொரோனா தொற்றைத் தடுப்பதற்காக பாடசாலைகளுக்கு நீண்ட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

தவிர, பொது இடங்களில் மக்கள் கூடுவதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக தேவைப்படும் பட்சத்தில் அரச, தனியார் நிறுவனங்களுக்கு விடுமுறை வழங்கப்படுவது தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், வெளிநாடுகளில் இருந்து வருகின்றவர்கள் தொடர்பில் அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, மலையில் இருந்து ஆட்களைத் தள்ளி விடுகின்றவனைக் கவனிக்காமல் விட்ட கதையாகவே இருக்கிறது.

அதிலும் கொரோனாத் தொற்று ஆரம்பித்த சீனாவில் இருந்து அந்த நாட்டவர்கள் இலங்கைக்குத் தாராளமாக வரமுடிவதுடன் அவர்கள் எந்தத் தங்கு தடையுமின்றி இலங்கைக்குள் நுழையவும் முடிகிறது.

இதுபோல இலங்கைக்கு வருகின்ற வேறு நாட்டுப் பிரஜைகள் தொடர்பிலும் வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்துவதை அரசாங்கம் தவிர்த்து வருகின்றது.

உண்மையில் கொரோனாத் தொற்றைத் தடுக்க வேண்டுமாயின், விமானங்கள் மற்றும் கடல் போக்குவரத்து துறைமுகங்களில் விசேட கண்காணிப்பு ஏற்பாடுகளும் சிகிச்சைப் பிரிவுகளும் இயங்கு நிலையில் இருக்க வேண்டும்.

இதைவிடுத்து வெளிநாட்டவர்கள் தரையிறங்கக்கூடிய இடங்களைப் பாராமுகமாக விட்டுவிட்டு, உள்நாட்டுக்குள் கொரோனாத் தொற்றைத் தடுக்கவென அரச, தனியார் நிறுவனங்களை மூடுவது அர்த்தமற்றது.

எனவே கொரோனாத் தொற்றைத் தடுப்பதாயின் ஒட்டுமொத்த தொற்று மூலங்களையும் கண்காணிப்பது மிக மிக அவசியம்.

# கடந்த 9ம் திகதிக்கு பின்னர் வெளிநாட்டிலிருந்து யாழ் வந்தவர்களை

## கொரோனா தடுப்பு முகாம்களுக்கு அனுப்ப ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த 9ம் திகதிக்கு பின் வெளிநாடுகளில் இருந்து யாழ் மாவட்டத்துக்கு வருகை தந்த வெளிநாட்டவர்களை விசேட கொரோனா தடுப்பு முகாங்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

குறித்த திகதிக்கு பின் வெளிநாடுகளில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்து சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அறிவிக்காமல் மறைந்துள்ள நபர்களை பொதுச் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலின் பிரகாரம் பொலிஸாரினால் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். (ம-3,10)

# கொரோனா தொடர்பில் அச்சமடையாது அவதானமாக இருக்க வேண்டும்

## வைத்திய நிபுணர் கேசவன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் கொர்ரோனா தொற்றுள்ளவர் இதுவரை இனம் காணப்படாத நிலையில் பொது மக்கள் அச்சமடையாத நிலையில் அவதானமாக இருக்க வேண்டும் என வைத்திய நிபணர் கேசவன் தெரிவித்துள்ளார் முகக்கவசத்தைப் பொறுத்தவரையில் கொரோனா நோயாளி என இனம் காணப்பட்டவர் அணிவது சிறந்தது

ஏனெனில் அவரிடம் ஏற்படும் இருமல் தும்மல் ஆகியவற்றிலிருந்து பிறரைப் பாதுகாக்கும் பொருட்டில் குறித்த முகக்கவசம் அணிவது கட்டாயமானது

இதனைத் தவிர மருத்துவ ஆய்வு கூடங்களில் பணியாற்றுவோர் மற்றும் கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவோர் அணிவது சிறந்ததாகும்

பொது மக்கள் கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இரு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை கைகளைக் கழுவுவது நல்லது

அத்தோடு காய்ச்சல் இருமல் தொண்டைநோ ஏற்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடி உரிய மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார் (ம-3,28)

# வெட்டப்பட்டிருந்த குழியில் விழுந்த இளைஞன் பலி

## யாழ்.அராலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- அராலி வீதியில் மதகு கட்டுவதற்காக வெட்டப்பட்டிருந்த குழியில் விழுந்து 25 வயதான இளைஞன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தில். அராலியை சேர்ந்த சூரியகுமார் கீர்த்தனன் (வயது-25) என்ற இளைஞனே உயி ரிழந்துள்ளார்.

யாழ்.நகரில் உள்ள உணவகம் ஒன்றில் வேலை செய்யும் குறித்த இளைஞன் இரவு பணி முடித்து வீடு திரும்பும் போதே. குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

# வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

மரியாதையாய் கேட்டால், கோட்டைகளும் உனக்கு வழிவிடும்.

-செனிகா

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** நாவற்குழி, கோகிலாக்கண்டி, தச்சன்தோப்பு, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, லிங்ரெடி மிக்ஸ பிறைவேற் லிமிற்ரெட் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** தவசிக்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், கூமாங்குளம் கிராமம், பத்தினியார்மகிழங்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** சிலாவத்துறையிலிருந்து முள்ளிக்குளம் வரை, முள்ளிக்குளம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# நெருக்கடியான இடங்களுக்கு செல்வதை தவிருங்கள்

## சுகாதாரத் திணைக்களம்

(சாவகச்சேரி)

கொரோனா வைரஸ் காரணமாக காலத்தின் தேவை கருதி இயலுமான வரை பொது இடங்கள் மற்றும் சன நெருக்கடியான இடங்களுக்கு செல்வதனைத் தவிர்க்குமாறு சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். இது தொடர்பாக சுகாதாரத் திணைக்களம் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் தொற்று ஏற்படாமல் இருக்க நாம் முன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கொரோனா வைரஸ் அண்மையில் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் மூலமாகவோ அண்மையில் வெளிநாட்டு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டவர்கள் மூலமாகவோ எம்மை வந்தடையலாம்.எனவே அண்மையில் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் மற்றும் அண்மையில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டவர்கள் தொடர்ச்சியாக 14நாட்கள் எவ்விடத்திற்கும் செல்லாமல் வீடுகளிலோ அல்லது தங்குமிடங்களிலோ இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.அத்துடன் வெளிநாட்டில் இருந்து வந்தவர்களுக்கோ அல்லது வீட்டில் இருப்பவர்களுக்கோ காய்ச்சல், இருமல்,மூச்சு விடுவதில் சிரமம்,தொண்டை வலி மற்றும் தலை வலி போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின் தாமதிக்காமல் உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலை / உங்களுக்கு அருகாமையில் உள்ள ஆதார வைத்தியசாலை/உங்கள் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி /பொதுச் சுகாதாரப் பரிசோதகரை நாட வேண்டும் என மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் ஒலிபெருக்கி வாயிலாகவும் அறிவுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது (ம-3,30)

# யாழ் விமான நிலையத்திலிருந்து உள்ளூர் சேவைகள் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் நேற்று முன்தினம் முதல் இரண்டு வாரங்களுக்கு மூடப்படுவதாக கூறப்பட்டபோதும் உள்ளூர் விமான சேவைகள் தொடர்ந்தும் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் நேற்று வழமைபோன்று விமானம் காலை 7.30 மணிக்கு இரத்மலானையில் இருந்து பயணிகளுடன் புறப்பட்டு யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு வந்தடைந்தது.

இதன்பின்னர் மீண்டும் காலை 9.20 மணிக்கு பயணிகளுடன் யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு சென்றது என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இருப்பினும் சென்னை- யாழ்ப்பாணம் விமான சேவை இரண்டு வாரங்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## இறைவனை அடைய வேண்டும்



ஒரே விதி வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாகச் செயற்பட முடியாது. ஒரே விதத்தில்தான் செயற்படும். இதைவிட நிச்சயமானது வேறொன்றும் இல்லை. இயற்கைக்கு இது விதியானால் எண்ணங்களுக்கும் இந்த விதி பொருந்தும். எழுகின்ற எண்ணங்களும் கிளம்பிய இடத்திற்கே செல்லும். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இறைவன் என்று அழைக்கப்படுகின்ற மூலகாரணத்திற்கு நாம் திரும்பிச் சென்றே ஆக வேண்டும்.

அவரைக் கடவுள் என்றோ, சுத்த பிரம்மம் என்றோ, இயற்கை என்றோ கூறிக்கொள்ளுங்கள். இயற்கை ஒரு நியதியில் இயங்குகிறது. கிரகங்களைப் பொறுத்தவரையில் மனிதன் உட்பட எது உண்மையோ அவை அனைத்தும் உண்மையே. மனிதனின் இப்போதைய நிலையை வீழ் ச்சி என்று யோக நெறியின் தத்துவ அறிஞர்கள் கூறுகின் றனர். ஆனால் அப்படி இல்லை. அதன் கருத்து என்னவென்றால் முதலில் அவர் பரிபூரணமானவனாக, தூயவனாக இருந்தான். பின்னர் வீழ்ச்சியடையத் தொடங்கினான். இதற்குக் கீழே போக முடியாது என்ற நிலை வந்தால் மேல் நோக்கிப் படிப்படியாக முன்னேறி வட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

வட்டம் பூர்த்தியாகியே தீரும். மனிதன் எவ்வளவுதான் கீழே சென்றாலும் இறுதியில் மேல்நோக்கி வந்து. மூல காரணமாகிய இறைவனை அடைந்தே தீர வேண்டும். அவன் தொடக்கத்தில் கடவுளிடமிருந்து வந்தான். இடையில்தான் மனிதனாகி இறுதியில் கடவுளிடமே திரும்பிப் போகிறான் என்று துவைத நெறி விளக்குகிறது.

# இடைக்காடு மகாவித்தியாலயத்தை வீழ்த்தி யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி சம்பியன்



யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற 20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து இடைக்காடு மகா வித்தியாலய அணி மோதியது.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி 15:9 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது. (க-60)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# கொரோனா எதிரொலி மன்னார் பிறீமியர் லீக் உதைபந்தாட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தற்போது இடம்பெற்று வருகின்ற 'மன்னார் பிறீமியர் லீக்' உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக 'மன்னார் பிறீமியர் லீக்' தலைவரும், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவருமான ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் கடந்த திங்கட்கிழமை ஊடகங்களுக்கு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

நாடு முழுவதும் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்திய 'கொரோனா வைரஸ்' தாக்கம் தற்போது இலங்கையையும் தாக்கியுள்ளது. இந்த நிலையில் இலங்கை அரசாங்கம் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கியுள்ளதோடு, மக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளைத் தடை செய்யவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதற்கமைவாக மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக இடம்பெற்று வந்த 'மன்னார் பிறீமியர் லீக்' உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த திங்கட்கிழமை முதல் தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் மறு அறிவித்தல் வரை குறித்த சுற்று இடைநிறுத்தப்பட்டுள்ளது. இயல்பு நிலை திரும்பிய பின் குறித்த சுற்றுப்போட்டி ஆரம்பிக்கப்படும்.

இதற்கு அனைத்து உதைபந்தாட்ட கழகங்களும், உரிமையாளர்களும் எமக்கு ஆதரவு வழங்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெற்று வருகின்ற மன்னார் பிறீமியர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகியது.

இதுவரை 25 சுற்றுக்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# தென்மராட்சிப் பிரதேசத்திற்கு சிறந்த பொது மைதானம் ஒன்று தேவை

## பொதுமக்கள் கோரிக்கை

பரந்த நிலப்பரப்பை உள்ளடக்கியுள்ள தென்மராட்சியில் முறையான விளையாட்டு மைதானங்கள் எவையும் இல்லை என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வருகின்றனர். இவ் விடயம் பிரதேச மட்ட அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் மற்றும் நகரசசபைக் கூட்டங்களில் எதிரொலித்து வருகிறது. இது தொடர்பாக சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபையின் விளையாட்டு மைதானம் காணப்படுகின்ற போதிலும் அது சரியான முறையில் புனரமைப்புச் செய்யப்படவில்லை. அங்கு உள்ளக விளையாட்டுகளுக்கான கட்டட வசதிகளும் இல்லை.

இதனால் பாடசாலை மாணவர்கள் மற்றும் விளையாட்டுக் கழக வீர,வீராங்கனைகள் யாழ்ப்பாண நகருக்கு சென்றே பயிற்சிகள் மற்றும் போட்டிகளில் பங்கேற்க வேண்டியுள்ளது. தென்மராட்சியில் 400 மீற்றர் சுற்றுவட்டம் கொண்ட உள்ளக விளையாட்டு வசதிகளுடன் கூடிய மைதானம் ஒன்று விரைவில் உருவாக்கப்பட வேண்டும் எனவும் மேலும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

சாவகச்சேரி நகரசபை தமது பொது மைதான புனரமைப்பிற்கு உலக வங்கியின் 500 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் ஊடாக கணிசமான நிதியை ஒதுக்கியிருப்பதாகத் தெரிவித்துள்ளது.

தென்மராட்சியில் சிறந்த விளையாட்டு மைதானம் இல்லாமையால் பிரதேச வீர, வீராங்கனைகள் தமது திறமைகளை வெளிக்கொணர முடியாத சூழல்காணப்படுகிறது.(க-30)

# பயம் உதவாது அச்சமடைய வேண்டாம்

## திமுத் கருணாரத்ன

உலகையேகொரோனாவைரஸ் பீதியில் ஆழ்த்தியுள்ள நிலையில் அதிலிருந்து தப்பிக்க கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை விடயங்கள் குறித்து இலங்கை அணித் தலைவர் திமுத் கருணரத்ன டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அதில், வெளியிடங்களுக்கு செல்கிறவர்கள் கவனமாக இருக்க வேண்டும். அடிப்படை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு நிச்சயமாக நம் ஒவ்வொருவருக்கும் உதவும்.

அதன்படி கைகளை கழுவுங்கள், பாதுகாப்பாகவும் அமைதியாகவும் அதேசமயம் ஜாக்கிரதையாகவும் இருங்கள். கொரோனா விடயத்தில் அச்சமடைந்தால் அது நிச்சயம் நமக்கு உதவாது என பதிவிட்டுள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்







"ஒன்றிணைந்தால் உட்படுத்தல் சாத்தியம்" என்ற கருப்பொருளுடன் சமூக பொருளாதார சூழல் அபிவிருத்தியாளர்கள் (சீட்) நிறுவனத்தின், வலுவூட்டல் வளாக விசேட பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி நிகழ்வானது பல்வேறு பிரிவுகளாக நடைபெற்றிருந்தது. இதன் இறுதி நாள் நிகழ்வானது வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய பொது விளையாட்டு மைதானத்தில் 300 இற்கும் மேற்பட்ட மக்கள் மற்றும் விருந்தினர்களின் பங்குபற்றலுடன் நிறைவுற்றிருந்தது. இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக வவுனியா மாவட்ட அரச அதிபர் சமன் பந்துல சேன, வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் நந்தகுமார், வவுனியா தெற்கு வலய விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் உதயராஜன், உளநலப்பிரிவு விசேட வைத்தியர் சுதாகரன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாடு அதிகாரி கெனடி உட்பட பல அரச மட்ட பிரதிநிதிகள் மற்றும் பாடசாலை அதிபர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். (க-299)

## வவுனியா கொரோ...

தடுப்பு முகாமுக்கு 2 பேருந்து களில் இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்புடன் வெளிநாட்டில் இருந்து வருகைதந்த விமான பயணிகள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

இதேபோன்று கடந்த 13 ஆம் திகதி வவுனியா பம்பைமடு பெண்கள் இராணுவ முகாமில் அமைந்துள்ள தடுப்பு முகாமிற்கு 5 பேருந்துகளில் 265 வெளிநாட்டு விமான பயணிகள் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,299)

## சுகாதார வைத்...

திய அதிகாரி நந்தகுமார் குறித்த வெளிநாட்டவர்களை விசாரித்துள்ளார்.

இதனைக் கண்ட இருவர் தமது வியாபாரத்தை குழப்புவதாக தெரிவித்து குளிர்பான நிலைய ஊழியர்கள். சுகாதார வைத்திய அதிகாரி மீது தாக்குதல் மேற்கொண்டதில் அவர் காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் தாக்குதல் மேற்கொண்ட சாவகச்சேரி மற்றும் மீசாலையைச் சேர்ந்த இருவரைக் கைது செய்துள்ளனர். (ம-3,10)

## பொது விடுமுறை...

முறை வழங்குமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதை அடிப்படையாகக்கொண்டு இந்த விடுமுறை நீடிக்கப்படுமா இல்லையா என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்ச நிலைமையைக் கட்டுப்படுத்த முன்னெடுக்கப்படும் தேசிய திட்டத்தில் மக்களின் நடமாட்டத்தைக் குறைக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அரசு குறிப்பிட்டுள்ளது.

மேலும் கொரோனாவைரஸை தடுப்பதற்கான பொது விடுமுறை நீடிக்கப்படாது என அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன இதற்கு முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கொரோனா...

கிளிநொச்சி இராணுவ முகாமில் கடமையாற்றும் சிப்பாயே வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

### கொரோனா ஆபத்தாக இருப்பதனால்

# தேர்தலை நடத்த முடியாத நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது

## ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)

நடைமுறையில் நாட்டில் தேர்தல் ஒன்றை நடத்தமுடியாத நிலை உள்ளமையை சுட்டிக்காட்டுவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு தலைவரை சந்திக்கவுள்ளதாக தேசிய மக்கள் சக்தி கட்சி தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நேற்று வேட்புமனுவில் கைச்சாத்திட்டப்பின்னர் இந்த கருத்தை வெளியிட்டார்.

தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டுமானால் ஒவ்வொருவருக்கும் தேர்தல் பரப்புரைகளில் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

எனினும் நடப்பில் இதனை உறுதிப்படுத்த முடியாது. கொரோனா வைரஸ் தொற்றும் ஆபத்து இருப்பதால் கூட்டங்களை ஏற்பாடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தமது கட்சி தேர்தல் பரப்புரைகளை இடைநிறுத்த முடிவெடுத்துள்ளது என்று அநுரகுமார குறிப்பிட்டார். ஏனைய கட்சி களுக்கும் இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம்.

எனினும் தம்மைப்போன்ற இடதுசாரி கட்சிகள் பெருமளவு பணத்தை செலவிடமுடியாமல் பெரும்பாலும் வீடு வீடாக தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுகின்றன.

எனினும் தற்போதைய சூழ்நிலையில் அதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதை தேர்தல் ஆணையாளருக்கு தெளிவுபடுத்தவுள்ளதாக அநுரகுமார தெரிவித்துள்ளார். (ம-3)

## புகைத்தலை...

வதற்கு புகைத்தலை கைவிடுவது தற்போதைய சூழ்நிலையில் மிகவும் உகந்தது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் அல்லது (COVID19) பாதிப்புக்கு உள்ளாகுவோருக்கு நிமோனியா காய்ச்சல் ஏற்பட்டு உயிரிழப்பை ஏற்படுத்தும். இதன் போது ஈரல் பலவீனமாக இருந்தால் இந்த உயிரிழப்பு எளிதில் ஏற்பட கூடும்.

இதனால் சிகரட் முதலானவற்றை புகைப்பதினால் ஈரல் பலவீனமடையும் என்பதினாலேயே புகைத்தலை தவிர்க்குமாறு வலியுறுத்தப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## அனுமதிக்கப்...

டறியப் பட்டதையடுத்தே அவர்கள் நேற்று திங்கட்கிழமை தங்களின் வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

மன்னார் இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ சிப்பாய் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த நபர் ஒருவருமே கொரொனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனும் சந்தேகத்தில் இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பாதிக்கப்பட்...

நிபுணர் அனில் ஜாசிங்க குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாத்திரம் கொரோனா தொற்றுக்குள்ளான 8 பேர் அடையாளம் காணப் பட்டுள்ள நிலையில் நேற்று மேலும் 10 பேருக்கு கொரோனா இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. (ம-3)

## முகக் கவசத்...

விலை 50 ரூபாய் எனவும் N 95 என்ற தரத்திலான மீளவும் பயன்படுத்தக் கூடிய மாஸ்க் 350 ரூபாய் எனவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்பு சுகாதார அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ளது. (ம-3)

# பொதுத் தேர்தலை பிற்போடும் தீர்மானம் எடுக்கப்படவில்லை

## - மகிந்த தேசப்பிரிய



(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று குறித்து அச்சுறுத்தல் நிலவுகின்ற போதிலும் கூட பொதுத் தேர்தலை பிற்போடும் எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லையென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் அடுத்த வாரம் வரையில்நிலைமைகளை ஆராய்ந்து தேர்தல் குறித்த தீர்மானம் ஒன்றிற்கு வரமுடியும் எனவும் சகல கட்சி பிரதிநிதிகளையும் சந்தித்து இது குறித்து கலந்துரையாடல் ஒன்றினை முன்னெடுக்கவும் முயற்சிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் குறித்து அரசாங்கம் மற்றும் சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தி வருகின்ற நிலையில் அரசியல் கட்சிகள் பலவும் தேர்தலை பிற்போட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையில் சுகாதார சேவைகள் பணிப்பக அதிகாரிகள் நேற்றைய தினம் தேர்தல்கள் ஆணைக்குழுவை சந்தித்து கலந்துரையாடல் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போதே தேர்தல்கள் ஆணையாளர் மேற்கண்ட விடயத்தை கூறினார். (ம-3)

## கொரோனா வைரஸ்...

பெறுவர் என்று கூறப்படுகின்றது.

இங்கிலாந்துப் பொதுச் சுகாதாரத்துறையின் தொற்று நோய்ப் பிரிவினுடைய பிரதிப் பணிப்பாளர், மருத்துவர் சூசன் ஹொப்கின்ஸ் கூறுகையில் வைரஸ் பரவுவதைக் குறைப்பதற்காக சுகாதாரப் பணியாளர்கள் உட்பட, அறிகுறிகள் உள்ளவர்கள் வீட்டிலேயே இருக்க வேண்டிய முக்கியத்துவத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டிய மோசமான சூழ் நிலையை, புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன என்று தெரிவித்துள்ளார். (ம-3)

## அனைத்து வழக்கு...

திகதி வரையிலான வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் குறித்த வழக்கு விசாரணைகளை ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவசர வழக்குகள் மாத்திரம் விசாரணைக்கு எடுத்து கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வெளிநாடுகளி...

இதன்படி, தங்களது அருகில் உள்ளவர்களின் நலன் கருதி அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது 119 என்ற இலக்கத்திற்கு அழைப்பு விடுத்து தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் சீனாவில் பரவ ஆரம்பித்த கொரோனா வைரஸ் தொற்று தற்போது உலகில் 120க்கும் மேற்பட்ட நாடுகளில் வேகமாக பரவி வருகின்றது.

இந்த வைரஸ் தொற்று காரணமாக 6 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதுடன், 175,000க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான 28 பேர் அடையாளம் காணப்பட்ட நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1145
சீட்டிழுப்பு திகதி 16.03.2020 ஊதா/திங்கள்
I 29 51 61 66
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,663,092/-
3 0 7 4

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 914
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.03.16
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,017,860/-
வெற்றி இலக்கங்கள்
13 16 50 73 W

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல: 3314 திகதி: 2020.03.16
நிலம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
07 09 63 68 Z
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
38,047,594.50

ராசி அதிர்ஷ்டம்
திகதி 16.03.2020 வெற்றி வாரம் 2800 வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் துலாம் 08 26 31 32
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4,821,436
ரூ.500 பரிசுக்குரிய 4 7 2 6
ரூ.100 பரிசுக்குரிய 7 4 2
பபள் சான்ஸ் விசேட இல.
17.03.2020 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுகளாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/03/16
சீட்டிழுப்பு இலக்கம் 1513
15 28 33 50 66 21 09

மஹஜன சம்பத
திகதி 2020/03/16
சீட்டிழுப்பு இலக்கம் 4136
U 0 3 1 0 1 4

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 16-03-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2423
E 09 33 39 53

மெகா பவர்
திகதி 16/03/2020
சீட்டிழுப்பு இலக்கம் 511
Y 02 02 28 61 67

# கொரோனா வைரஸை இலங்கையிலிருந்து ஒழிப்போம்

## உள்நாட்டலுவல்கள் அமைச்சு விசேட சுற்றறிக்கை

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தாக்கத்தினை இலங்கையிலிருந்து முற்றாக ஒழிப்பதற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் விசேட சுற்றறிக்கை ஒன்று விடப்பட்டுள்ளது.**

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

01. இலங்கையில் தற்போது குறிப்பிடும் அளவிலான கொரோனா நோய்த்தொற்றுக்கு ஆளான நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்ற காரணத்தினால் இந்த நோய் நிலைமையானது தொற்றுநோய் நிலைமை வரையில் வளர்ச்சியடைவதனை தடுக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அனைத்து அரச, பகுதியளவு அரச, தனியார் துறையினரது மட்டுமன்றி பொது மக்களினதும் கடமையாகும்.

02. அதன்படி இந்த நிலைமை மேலும் விரிவடைவதனை தடுக்கும் வகையில் கீழ்வரும் நடவடிக்கைகளை பின்பற்றுமாறு தயவுடன் வேண்டிக் கொள்வதுடன், அதனடிப்படையில் எமது அமைச்சினூடாக சகல மாகாண கிராம சேவையாளர்கள், அரசாங்க அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு ஆலோசனைகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

இந்த கொரோனா நிலைமையினை கட்டுப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட கொரோனா ஒழிப்பு செயலணி மேல் மாகாண ஆளுநர் விசேட வைத்திய நிபுணர் சிதா அரம்பேகெலவின் தலைமையில் தற்போது இலக்கம் 1090, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, இராஜகிரிய என்ற இடத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

இச்செயலணிக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அவசியமான ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கும் 117 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளுமாறு அறியத் தருகின்றேன்.

03. இதற்கு இணையாக சகல மாவட்ட செய லாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர் மட்டத்தில் ஒத்துழைப்புக்களைப் பெற்று தமது அலுவலகத்தினுள் கொரோனா ஒழிப்புத் தகவல்களை அறிக்கையிடும் நிலையமொன்றினை ஆரம்பித்தல் வேண்டும். இந்த கொரோனா ஒழிப்பு தகவல்களை அறிக்கையிடும் நிலையத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக குறித்த அலுவலகம் உள்ளடங்கும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் இவ்வலுவலகத்திற்கு பொலிஸ் அலுவலர் ஒருவர் இணைப்புச் செய்யப்படுதல் வேண்டும். இதன்படி கிராம மட்டத்தில் அந்தந்த கிராம அலுவலர் பிரிவுக்கு பொறுப்பான கிராம அலுவலர், குடும்ப சுகாதார உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் ஆகிய அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்புடன் கிராமிய மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள கிராமிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அல்லது கிராமிய டெங்கு ஒழிப்புக் குழு என்பவற்றுடன் இணைந்து கீழ்வரும் வகையில் செயற்படுதல் வேண்டும்.

04. அதனடிப்படையில் பிரதேச செயலாளருக்கு தகவல்களை பெற்றுக் கொடுக்கும் வகையில் தங்களது அமைச்சு, திணைக்களம், கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச் சட்ட நிறுவன அலுவலகங்களிலும் கொரோனா தகவல்களை அறிக்கையிடும் நிலையமொன்றினை ஆரம்பிக்குமாறு அறிவிக்கின்றேன். அதன்படி பின்வரும் செயன்முறைகளை பின்பற்றுமாறு அறிவிக்கின்றேன.

I. இந்த நிலையங்களுக்கு அறிக்கையிடப்படும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக சந்தேகிக்கப்படும் நபர்கள் தொடர்பாக குறித்த சுகாதார அலுவலர்களுக்கு அறிக்கையிடுதல்.

II. பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தற்போது தாபிக்கப்பட்டுள்ள பிரதேச சிவில் பாதுகாப்பு குழு அல்லது பிரதேச டெங்கு ஒழிப்புக் குழுக்கள் மூலமாக கொரோனா நோய்த்தாக்க நிலைமை அல்லது கொரோனா நோய் ஒழிப்பு தொடர்பாக தெளிவுபடுத்தல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை பாதுகாப்புத் தரப்பினரது ஒத்துழைப்புடன் மேற்கொள்ளல்.

III. கிராமிய மட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதென சந்தேகிக்கப்படும் நபர்கள் காணப்படின் அதுதொடர்பில் கிராம அலுவலர் உட்பட கிராமிய மட்டத்தில் மேலே தெரிவிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அறிக்கையிடுமாறு அறிவிப்பதுடன் அச்சந்தேகநபர்களை பாதுகாப்புத் தரப்பினரின் ஒத்துழைப்புடன் தனிமைப் படுத்தி கண் காணித்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்துதல்.

IV. வெளிநாடுகளிலிருந்து வருகை தருகின்ற தனிமைப் படுத்தி கண் காணிக்கும் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்ற நபர்கள் மற்றும் சுயமான கண்காணிப்பு நடவடிக்கைகளில் (தமது வீட்டில் இருந்தவாறே) ஈடுபடுகின்ற நபர்களுக்கு, தாபனக் விதிக்கோவையின் அத்தியாயம் XII இன் 12:9 மற்றும் அத்தியாயம் XXVIII இன் 13:1:2 ஆம் உப பிரிவுகளின்படி அவசியமான விசேட விடுமுறைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களப் பிரதானிகள் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

V. சகல அரச அலுவலகங்களுக்கும் வருகை தருகின்ற அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் நோய்க்கிருமிகளில் இருந்து பாதுகாப்பு பெறும் வகையில் நோய்க்கிருமி நீக்கி கைகளை கழுவுவதற்கான நீர்த்திரவியங்கள் மற்றும் கைககளில் தடவும் நீர்த்திரவியங்கள் (Sanitizer) பெறீறுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

VI. பாரிய அளவில் அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூட்டும் பயிற்சி அமர்வுகள், கூட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்துதல்.

VII. கொரோனா நோய்த் தாக்க நிலைமைகள் தொடர்பான தற்கால தகவல்களை சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் வெப் வலைத் தளத்தில் (http://www.epid.gov.lk) பெற்றுக் கொள்ள முடியும்.


05. எந்தவொரு சூழ்நிலையிலும் அத்தியாவசிய மக்கள் சேவைகளை தடையின்றி வழிநடத்திச் செல்ல வேண்டிய காரணத்தினால் விசேட விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும் உணவு, மருந்து, நீர், மின்சாரம், சுகாதாரம் மற்றும் சர்வதேச வங்கிச் சேவைகள் உட்பட அத்தியாவசிய சேவைகளை உரிய வகையில் தொடர்ச்சியாக பேணிச் செல்வ தற்கு அதிகாரிகளால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறானதொரு தேசிய இடர் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் பொய்யான தகவல்களை பரப்புவோர் தொடர்பாக அவதானத்துடன் செயற்படுமாறும், ஏற்றுக்கொள்ளப்பட்ட மூலாதாரங்களில் இருந்து கிடைக்கின்ற தகவல்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவிப்பதுடன் இந்த கொரோனா நோய் நிலைமையினை தவிர்த்துக் கொள்வதற்காக அரசிற்கு அவசியமான அனைத்துவிதமான ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன் என்றுள்ளது. (ம-3)

## மரண அறிவித்தல்

### குழந்தைவேலு ஆனந்தராசா

**(திருநகர் ஐங்கரன் மில் உரிமையாளர்)**



வேலணை கிழக்கினை பிறப்பிடமாகவும் இல.953, திருநகர் வடக்கு கிளிநொச்சியினை வதிவிடமாகவும் கொண்ட அனைவராலும் ஐங்கரன் மாமா என செல்லமாக அழைக்கப்படும் குழந்தைவேலு ஆனந்தராசா 16.03.2020 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமநாதன்-ஆச்சிமுத்து தம்பதிகளின் மருமகனும் வள்ளியம்மாவின் அன்புக் கணவரும் மோகனராசா (லண்டன்), தாட்சாயினி (ஆனந்தி - பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி), காலஞ்சென்ற குகராசா, அரவிந்தராசா (லண்டன்), தர்சினி (தங்கம்-ஆசிரியர், வவுனியா நெடுங்கேணி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தயாளினி (லண்டன்), புஸ்பாகரன் (பிரதேச செயலகம், கண்டாவளை), சாஸ் (லண்டன்), யசோதரன் (உரிமையாளர் - வானவில் அரிசி ஆலை, நெடுங்கேணி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிநயா, குபேரன், ஆதவன், அங்குழலி, அருள்நயனி (மாணவர்கள் - கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்) லண்டனைச் சேர்ந்த அனந்திகா, அக்ஷயா, அய்ஷா, அயான் ஆகியோரின் அன்புப் பேரனும் தங்கராசா (கனடா), காலஞ்சென்ற செல்வநாயகம், தியாகராசா (கனடா), சிவராசா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாலச்சந்திரன் (லண்டன்), இராமச்சந்திரன் (வட்டக்கச்சி), யோகேஸ்வரி அம்மா (திருநகர்), தனபாலசுந்தரம் (ஜேர்மன்), பூபாலச்சந்திரன் (லண்டன்), பரமேஸ்வரி (அதிபர் - மலையாளபுரம் அ.த.க பாடசாலை), வளர்மதி (விவசாயத்திணைக்களம் - கிளிநொச்சி), ரவிச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2020) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.

(C-9503)

குடும்பத்தினர்
0773560785

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK – 550*/= Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS
(C-9459)

நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
(C-9459)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.